எழுத்து

106

எட்டாம் ஆண்டு

ஆசிரியர்: சி. சு. செல்லப்பா

டி. எஸ். சொக்கலிங்கம்
தலையங்கம்
நவீன சுல்தான் தர்பார்
சு. சங்கரசுப்ரமண்யன்
விஞு - விடிவு
தர்மு சிவராமு
மோகினிமாயை
கு. ப. ராஜகோபாலன்
பொய்த்தேவு
சி. சு. செல்லப்பா
பகைத்தொழில்
சி. சு. செ.
இரண்டு கவிதைகள்
எஸ். வைதீஸ்வரன்
கொலைகாரர்கள்
சி. மணி
கொல்லிப்பாவை-5
டி. கே. துரைஸ்வாமி
எழுத்தும் எழுத்தாளர்களும்
வல்லிக்கண்ணன்
ரோஜாக்குடும்பம்
ராபர்ட் ஃப்ராஸ்ட்
இலக்கிய கூட்டங்கள்

18 JAN 66 MADR...

ஜனவரி 66

85

50 பைசா

8-ம் ஆண்டு
ஏடு 85
ஜனவரி
1966

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

154645
031m21L N58

தலையங்கம்

காந்தி டி. எஸ் Kb
தினமணி சொக்கலிங்கம்

டி. எஸ். சொக்கலிங்கம் இறந்துவிட்டார், இந்த மாதம் 9ம் தேதி, அவரது அறுபத்தி ஏழாவது வயதில். தன் இருபத்தியோராவது வயதிலிருந்து, 1920 முதல் தேசபக்த வாழ்வு வாழ்ந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டு தியாக வாழ்வு வாழ்ந்த ஒரு நெஞ்சு நின்றுவிட்டது. புஷ்டியான தமிழை நாற்பது ஆண்டுக் காலமாக கையாண்டுவந்த ஒரு கை ஓய்ந்துவிட்டது. 1930க்கள் கால தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி இயக்க மூலவர் ஒருவரின் மூச்சு நின்றுவிட்டது. சிறந்த பத்திரிகை நியதிகளை உருவாக்கி இன்றய தமிழ் பத்திரிகை வளத்துக்கு வகை செய்த, நாற்பதாண்டுகள் பத்திரிகைத் தொழிலில் உழைத்து இறுதிவரை பத்திரிகாசிரியராகவே வாழ்ந்து வந்த ஒரு சக்தி அடங்கிவிட்டது. அரசியல், இலக்கியம், மொழி, முதலிய துறைகளில் சர்ச்சை பின் சர்ச்சையாக தான் ஈடுபட்டதுடன், மற்றவர்களும் ஈடுபட ஊக்கம் கொடுத்து கச்சை கட்டி நின்ற ஒரு போராட்ட உள்ளம் அணைந்துவிட்டது. ஆஜானபாகுவான தோற்றமும் வசீகரமான புன்னகை கொண்ட முகமும் காட்டிய நட்பு உருவம் மறைந்துவிட்டது.

தமிழகத்துக்கு டி. எஸ். சி. மரணம் பெரிய நஷ்டம் என்று சம்பிரதாயமாக சொல்லிவிட்டால் போதாது. அவருடைய சாதனை பத்திரிகைத் துறையில் தலை சிறந்த சாதனை. 'சுதந்திரச் சங்கு' காலஞ பத்திரிகையோடு தோள் கொடுத்து, காந்தி காலஞ பத்திரிகையை 1932ல் நடத்தி அன்று தேசியக்கனல் எழுப்பி தமிழ் மக்களுக்கு நாட்டுப்பற்றை வளர்த்த அன்றய நிகழ்ச்சி இன்று கதை. 1934ல் 'தினமணி' தினசரி ஆசிரியப் பதவியேற்று சுதந்திரச் சங்கு, காந்தி, மணிக்கொடி ஆகிய மூன்று பத்திரிகைகளின் தொனிகளையும் கலவைப்படுத்தி 'தினமணி தொனி' என்று ஒன்று உருவாக்கி அன்றய பத்திரிகை உலகில் ஒரு புதுமையும் புரட்சியும் விளைவித்து வேகமும் விறுவிறுப்பும், தெளிவும் நேரடித்தன்மையும், தாக்குதலும் விளக்கமும் அடங்கிய ஒரு தமிழ் நடையை தான் எழுதியதுடன் ஒரு கோஷ்டியே அத்தகைய நடை எழுதவைத்து அன்றய பத்திரிகை நடையை புதுசுபடுத்தியது அன்று வரலாறு இன்று கேள்விப்படுவது. 1937ம் ஆண்டு தேர்தலின்போது ஜஸ்டிஸ் கட்சி ஆதிக்கத்தை தகர்த்து எறிய சொக்கலிங்கத்தின் தலையங்கங்கள் பத்திரிகை பிரசாரமாக மக்களுக்குகிடைத்ததை இன்று நினைவுபடுத்திக் கொண்டாலும் பிரமிக்கச் செய்கிறது.

சொக்கலிங்கம் தான் ஒரு படைப்பாளி என்று சொல்லிக்கொண்டதில்லை. இலக்கியத் துறையில் அவரும் குறிப்பிடும்படியாக ஈடுபடவில்லைதான். ஆனால் பாரதிக்குப் பிறகு படைப்பு அன்று இருந்த நிலைமையை கண்டு வெகுண்ட அவர், வ:ரா.கே. சீனிவாசன் இருவருடன் சேர்ந்து சிந்தித்து, படைப்பிலே புதுமை, தற்காலத் தன்மை, ஜீவன் ஏற்படவேண்டிய உடனடி அவசியத்தை உணர்ந்து, தன் பத்திரிகைகளில் அதுக்கு இடம் கொடுத்து 'முதல் வரிசை படைப்பாளிகள் பிறக்க காரணமாக இருந்தவர் அவர். 'காந்தி'யில் பி. எஸ். ராமையாவின் கதைகளைப் போட்டதும் 'புதுமைப் பித்தனுக்கு தினமணியில் வசதியான இடம் தந்து அவர் படைப்புகளுக்கு ஊக்கம் தந்ததும் ந ராமரத்னம், தணிகாசலம் ஆகியோருக்கு சங்கீதம், சினிமா ஆகிய துறைகளில் அன்று மக்களுக்கு புதிய பார்வை விழச் செய்யவும், அந்த துறைகளில் அபிவிருத்தி ஏற்படவும் விமர்சனங்கள் விவாதங்கள் நடத்த சுதந்திரம் கொடுத்ததும், இன்றய நோக்கிலிருந்துகூட நல்ல இலக்கியத்தரமானவை என்று சொல்லும்படியாக தலை சிறந்த எழுத்தாளர்களை எழுதவைத்து தினமணி ஆண்டு மலர்கள் கொண்டுவந்ததும் அவர் அன்று கொடுத்த சில ஊக்கங்கள்.

1930க்கள் கால மறுமலர்ச்சி இயக்கத்தில் உள்ளிருந்தவர்கள் தங்களிடையே மையபுருஷனாக இருந்த சொக்கலிங்கத்தை தங்கள் ஆயுட்காலத்தில் மறக்கமுடியாது. அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்கள், அவருடைய கருத்துக்களை கேட்டு பாதிப்பு பெற்றவர்கள் எல்லோருக்கும் அவர் மரணம் சோகத்தை தரும். தங்கள் சொந்த நஷ்டமாகவே கருதுவார்கள்.

இன்றய, வருங்கால வாசக சமூகமும் அவரை தங்கள் மனதில் வைத்துக் கொள்ளத்தக்க அளவுக்கு ஒரு கால கட்டத்தில், அதுவும் முக்கியமான நமது தமிழ்நாட்டு பத்திரிகை, இலக்கிய உலக திருப்ப காலத்தில் அவர் நிறைவாக வாழ்ந்துவிட்டுப் போயிருக்கிறார். சொக்கலிங்கத்தின் புது எழுத்துக்களை இனி பார்க்கமுடியாது. அவருடைய பழய எழுத்துக்கள் இருக்கின்றன நம் பார்வைக்கு.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அவரது அறுபதாண்டு நிறைவு, பற்றி எழுத்து:—

'இலக்கியத்துறைக்கும் மற்ற துறைகளுக்கும் யார்யாரை எப்படி எப்படி உபயோகித்து பலன் விளைவிக்கவேண்டும் என்பதை துல்யமாக நிதானிக்க முடிந்த சொக்கலிங்கம் நன்கு பயன்படுத்தி இலக்கிய சோதனைகளுக்கு ஒரு தினசரியில் இடம் கொடுத்த அளவு இன்றும் நினைவில் இருக்கிறது' என்று எழுதி இருந்தது.

இந்த தனித்திறமை வாய்ந்தவரும் தேசபக்தரும், சிந்தனையாளரும் பத்திரிகாசிரியரும், சிறந்த தமிழ் நடைக்காரரும், போராட்டக்காரரும் மறுமலர்ச்சி இலக்கிய மூலவர்களில் ஒருவருமான சொக்கலிங்கத்துக்கு, தான் வழிவந்த முன்னோர்களை படைத்தவர்களில் ஒருவர் என்று கடமை உணர்ச்சி காட்டி தன் அஞ்சலியை செலுத்திக் கொள்கிறது எழுத்து.

நவீன சுல்தான் தர்பார்

சு. சங்கரசுப்ரமண்யன்

சில ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யா சென்று திரும்பிய தமிழ் நடன நடிகை ஒருவர் மன வருத்தத்துடன் சொன்னார், ''அங்கே கலைஞர்களைச் சாதாரணமாகத்தான் கருதுகிறார்கள். அவர்களைச் சந்திக்கும்போது விசேஷ ஆர்வத்தையோ உற்சாகத்தையோ வெளியிடுவதில்லை.'' நடிகர்களின் தரிசனத்துக்காக நாள் கணக்கில் குறிப்பிட்ட இடங்களில் தவம் கிடக்கும் நம் ஊர் ரசனைக்கு இது விசித்திரமாகத் தான் படும். அங்கே சந்திர மண்டலக் குடியேற்றத்தைச் சாத்தியமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாமோ, 'அன்று வந்ததும் அதே நிலா இன்று வந்ததும் இதே நிலா' என்று சந்திரனைச் சாட்சிக்கு இழுத்து காட்சி சமைக்கிறோம். எது முன்னேற்றம் ?

வடையைத் தின்னாமல் அதிலுள்ள துளையைக் எண்ணிக் கொண்டிருக்கிற புத்தியை நுண்ணிய ஆராய்ச்சி என்று யாரும்பாராட்ட மாட்டார்கள். வெட்டி வேலை என்று தான் மட்டம் தட்டுவார்கள். அப்படிப்பட்ட வெட்டி வேலையை, கலையின் பெயரால் பரவலாகச் செய்து கொண்டு அதன் விபரீத விளைவுகளைச் சமுகம் சுமந்து கொண்டிருப்பதைக் ''கண்ணிருந்தும் குருடர்களாய்'' சகித்துக் கொண்டிருக்கிறோம்.

கலை என்றால் சினிமா தான் என்றும் கலைஞன் என்றால் நடிகன் மட்டுமே என்றும் புதிய இலக்கணம் பிறந்துவிட்டது.சினிமா என்கிற விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, முன்னாள் இருந்த ஆய கலைகள் அறுபத்தி நான்கையும் ஆக்ரமித்து அப்புறப் படுத்தி விட்டது. அது எல்லாக் கலைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டதாக நமக்குத் திருப்தி. அதனால் தானோ என்னவோ, சுமை தாங்காமல் தானும் கெட்டு அசல் கலைகளையும் கெடுத்து விட்டது அது

சினிமா ஆரம்ப காலத்தில் பொழுது போக்கு என்று கருதப்பட்டது அப்பால் பலருக்கு வேலை தரும் தொழிலாக மாறியது. இன்று எல்லோருடைய பொருளையும் தொழிலையும் சேர்த்துக் கெடுக்கிற சாதனமாக மாறிவிட்டது, இது சினிமாவின் குற்றம் அல்ல. சினிமாவை விட நடிகர்களுக்கு முக்யத்வம் தருகிற நம்முடைய மனப் புான்மையின் தீய விளைவே. படத்தை உருவாக்கும் பணியில் பெரும் பங்கேற்கும் வசனகர்த்தாவுக்கோ, தொழில் நிபுணர்களுக்கோ வாய்க்காத மவுசு நடிகர்களுக்குக் கிட்டுகிறது. அந்த மவுசை அளிக்கிற ரசனை உள்ளத்தின் போலித் தன்மைக்கு ஒரு சான்று போதும். படத்தின் கதையைக் கேட்டால் மனோகரன் என்கிற இளவரசனைப் பற்றியும் அவனுடைய அன்னைப் பத்மாவதியைப்பற்றியும் சொல்ல மாட்டார்கள். நடிகர் நடிகையின் பெயர்களைச் சூட்டியே உறவு காட்டி கதை நகரும். பாத்திரங்களைப் படைத்த பம்மல் சம்பந்தமுதலி யாருக்கு இந்த ரசனை பெருமையையா தேடித் தருகிறது ?

இந்தப் போலி ரசனையை வளர்க்கும் பொறுப்பு பத்திரிகைகளையும் அரசியல்வாதிகளையுமே சாரும். ஒரு ஆபீஸ் குமாஸ்தாவோ அன்றாடக் கூலி வாங்கும் தொழிலாளியோ அரசியலில் ஈடுபட்டுப் பெறமுடியாத கௌரவத்தை நடிகர்கள் சுலபமாகப் பெறமுடிகிறது, அந்தக் கௌரவத்தையே தங்கள் தொழிலுக்குச் சாதகமாகத் திருப்பி விடவும் வாய்ப்பு அதிகம், இந்த இருமுனை லாபத்தால் நடிகர்கள் அசைக்க முடியாத செல்வாக்குப் பெற்று அதை நிறுத்திக் கொள்ளத் திட்டமிட்டு முயலும் போது, நீண்ட நாள் உழைப்புடன் அரசியலில் திளைத்தவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, நடிகர்களின் நிழலில் தொத்திக் கொள்ளும் நிலை உருவாகிறது.

பத்திரிகைகளின் பங்கு மகத்தானது. முன்பெல்லாம் ''மஞ்சள் பத்திரிகை'' என்று தனியாக உண்டு. இப்போதோ பெரும்பாலான ஏடுகளில் ''மஞ்சள் பக்கங்கள்'' நிச்சயம் உண்டு. பேட்டிகள் என்ற பெயரிலும் கேள்வி-பதில் ரூபத்திலும் அவைகள் தருகிற சங்கதிகள் சமுகக் கட்டுக்கோப்பையே குலைத்து விட்டன. நடிகர்கள் தும்மினால் முதல் பக்கத்தில் முழு நீளத் தலைப்பு நெருக்கடி காலத்தில் கூட நடிகர்கள் போர்முனைக்குப் போகிற விபரத்துக்கு முதலிடம். அப்புறம் தான் சட்டசபை, ஐ. நா. மன்றம் எல்லாமே.

இந்தப் பத்திரிகைகளினால் 'உருவாக்கப்படும்' மக்களும் திசை தப்புவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. நல்ல நடிப்பு என்பது நடிகர்கள் கொடுக்கும் நன்கொடையின் தொகையையும் நடிகர்கள் வளர்க்கும் நாய்களின் எண்ணிக்கையும் சார்ந்து அமைகிறது. உதவாக்கரைக் குறிப்புகள் வேதவாக்கியங்களாகப் படுகின்றன. குறிப்பிட்ட நடிகைக்கு இத்தனை மொழிகள் தெரியும் என்கிற புள்ளி விபரத்தால் யாருக்குப் பலன் ? சென்ட்ரல் ஸ்டேஷன் போர்ட்டருக்குக் கூட அத்தனை மொழிகள் தெரியும். அதெல்லாம் தொழில் தேவையை அநுசரித்த யோக்யதாம்சம். அதற்காக அவர்களுக்கு 'பன்மொழிப்புலவர்' பட்டம் சூட்டி, தெ. பொ. மீனாட்சிசுந்தரம், கா. அப்பாதுரை இவர்கள் வரிசையில் அமர்த்த முடியுமா ?

நடிகர்கள் பெயரிலே மன்றங்கள். அதிலேயும் போட்டி, அடிதடி, படம் வெளியாகிற கொட்

டகையிலே அலங்காரவளைவுகள், நீர் மோர் உபயம், பாரதி விழாவிலே நடிகர்கள், பாரதியை மறந்து நடிகர்களுக்குப் பாராட்டு, தலைவர்கள் பிறந்த தினத்தில் பந்தியில் பரிமாற நடிகர்கள்; தலைவரின் பலநாள் தொண்டைவிட நடிகரின் சில மணி நேர 'சேவை'க்கு விளம்பரம்.

எல்லாவற்றிற்கும் சிகரமான கூத்து, நெருக்கடி நிலைமையிலும் போர்க்காலத்திலும் கூட நடிகர்களுக்குத் தரப்படும் முக்கியத்வம். குறைவான மாதச் சம்பளம் வாங்கும் எண்ணற்ற தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்திலிருந்து யுத்த நிதிக்கு அளிக்கும் போது அதைப் பற்றிய செய்திகள் கடலில் கரைத்த காயம். நடிகர்கள் கொடுக்கப் போவதாக அறிவிப்பு செய்தாலே அபார விளம்பரம். இதைக் கூட விட்டு விடலாம். போர் நடந்த இடத்துக்குச் சென்றுவந்த நடிகர், நடிகையருக்குத் தனிப்பட்ட பாராட்டும், பெருந்தலைவர்கள் ஆசியும் புகழுரையும் தேவைதானா ? தங்கள் தொழில் திறமையைப் பயன் படுத்திய கடமையைப் பாராட்ட தனிக்கூட்டமா ? நெருக்கடி நிலைமையில் சாப்பாட்டைவிட பேச்சையல்லவா முதலில் குறைக்க வேண்டும் ?

இந்த சமயத்தில் உண்மையிலேயே 'களம் கண்ட' வீரன்போத்த ராஜுவுக்கு ஆந்திர மாநில தெனாலியில் அமோக வரவேற்பு, செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்து மக்களும் மனமாரக் கலந்து கொண்டிருக்கின்றனர். தொடர்ந்து செய்தி வருகிறது, 'களம் கண்ட' தமிழ் வீரன் லட்சுமணன் சென்னைக்கு வந்ததாகவும் கோட்டையிலே முதலமைச்சரைச் சந்தித்ததாகவும். நியாயமாகப் பார்த்தால் அவரையல்லவா கடற்கரையில் நிறுத்தி வைத்து, மக்களை அழைத்து கைகுலுக்கச் செய்திருக்க வேண்டும் ?

உலகமே காட்டு மிராண்டித்தனத்தில் அமிழ்ந்து கிடந்தபோது நாம் நாகரீகத்தில் மிதந்ததாக பெருமை பேசுகிறோமே. இன்று எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் ? ஒரு காலத்தில் நடிகர்களைச் சமுகம் 'கூத்தாடிகள்' என்று ஒதுக்கி வைத்திருந்தது. காலப்போக்கில் அந்த இழிநிலை மாறி 'கலைஞர்கள்' என்ற அத்தஸ்து தரப்போய், மக்கள் அவர்களைத் தங்கள் தலைகளில் தூக்கி வைத்து ஆடும் அவலநிலை உருவாகி விட்டது. நீர்க்குமிழி அந்தஸ்து படைத்த ஒரு தொழிலாள வர்க்கத்துக்கு சமுகமே அடிமைப்பட்டு, ஒரு நவீன சுல்தான் தர்பாரில் மண்டியிட்டுக் கிடக்கும் நம்முடைய பரிதாப நிலையை வர்ணிக்க, மீண்டும் பாரதியைத் தான் கூப்பிடவேண்டும். அவனுக்கோ புதியவரி பாடவேண்டிய சிரமம் கிடையாது. "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்ற பழைய வரியே போதுமே.

வினா-விடிவு

தர்மு சிவராமு

உள்ளங்கைச் சதைகிழிய
கொட்டிக் கொட்டிக்
கூப்பிட்டேன்,
வந்தது பதில்இன்று:
எங்கிருந்து?
என்னைச்சூழ்ந்த சுவரின்அதைப்பு,
இரவின் உடைந்த சிரிப்பு.

கொட்டுயகைக் கேள்விக்கு
கொட்டிஒலித்த பதில்முரசு,
என்நாவுக் கழி
என்செவிப் பறைக்கே
கொடுத்த அதிர்வு.

அறிவின் எல்லை வினு;
பதில் வினுவின் சிசுவா?
கேள்வியும் பதிலும் சிசுக்கள்
அறிவுக்கு; அறிவின்
அவதா ரங்கள்.

அறிவோ பெட்டகக்கந்தல்.
காலதேசக் கறகள்
நிகழ்ச்சிக் கணங்கள்
விழுந்து
சிதறி
விரித்த
அலைரேகை ரிக்கார்ட்

விளிம்பு நோக்கி அலைவது கேள்வி;
பிரதிபலித்து திரும்பினஅலை பதில்.
கிழிசல் கேள்வி : தையல் பதில்
அலைகள் இழைந்த
தையல் சிக்கல், அறிவு!

தெளிவு?...சாந்தி?...விடிவு?...
கிழிசல் நடுவே
பிளந்த வெளி!
ஒளிமண் கரையில்
அலைத்தலைச் சரிவு!...
ஆம், வினுவின் மௌனம்
தெளிவு.
சாந்தி.
விடையல்ல!

மோகினி மாயை

கு. ப. ராஜகோபாலன்

[1943-ல் 'கலாமோஹினி' பத்திரிகையில் வெளிவந்த இந்த சிறுகதை இங்கு மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது]

1

"ஆனாலும் இந்த துஷ்டத்தனம் உங்களுக்கு ஆகாது. உங்களைக் கேட்பாரில்லையே!" என்று ரதி கொஞ்சம் ஆத்திரத்துடன் சொன்னாள்.

"என்னத்தை இப்பொழுது புதிதாகக் கண்டு விட்டாய்?" என்று மன்மதன் சீறினான்.

"அந்தப் பையன் பாலு, அவன் பாட்டிற்கு அடுத்த வீட்டுக் கமலாவுடன் சிறுபிள்ளையாய் இருந்ததுமுதல் சகஜமாகப் பழகிக்கொண்டு வந்தான். 'அம்மாமி, அம்மாமி!' என்று களங்கமற்ற உள்ளத்துடன் அவளுடனேயே பள்ளிக்கூட நேரம் போக மற்ற பொழுது முழுதும் கழித்துப் புத்தகங்களை வாங்கி வாசித்துக்கொண்டு வந்தான். அவனை எதற்காக இப்பொழுது இருந்தாற் போலிருந்து கிளறிவிட்டீர்கள்?"

"அவனை மட்டும் தான் கிளறிவிட்டேனா, அவள் பேரிலும்தான் பாணங்களைத் தொடுத்திருக்கிறேன்."

"எதற்காக இந்தச் சேஷ்டை? செய்கிற அக்கிரமமெல்லாம் போதாதா? உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு எனக்கும் இந்தப் பாபங்களிலெல்லாம் பங்கா?—என் தலையெழுத்து!"

"மனிதர்களெல்லாம் மனோதத்துவ ஆராய்ச்சி செய்கிறார்களே—நான் செய்யக்கூடாதோ? நிர்ப்பந்தமற்ற காதல் பரீட்சை, விவாக ரத்து என்றெல்லாம் எவ்வளவோ ஆராய்ச்சி செய்கிறார்கள். நாமும் எவ்வளவோ செய்திருக்கிறோம்—இல்லையென்று சொல்லவில்லை. சந்திரன்—தாரை, இந்திரன்—அகலிகை, கசன்—தேவயானி இப்படியாக! மற்றொரு ஆராய்ச்சி செய்து பார்ப்போம் என்று இந்த இரண்டு பேர்வழிகளையும் தூண்டியிருக்கிறேன்."

"இதென்ன ஆராய்ச்சி புதிதாக அப்படி, சற்று சொல்லுங்கள்!"

"கமலத்துக்கு முப்பது வயதாகிறது. இரண்டாம் தாரம். குழந்தைகள் இல்லை. தேகக்கட்டு அப்படியே இருக்கிறது. இருபது வயது பெண் போல இருக்கிறாள்."

"நல்ல அழகு—உடம்பு நிறைய நகைகள்!"

"பாலுவுக்கு இருபது வயது. வாட்டசாட்டமான அழகான பையன். பெண்ணைப்பற்றிய ஏக்கம் இப்பொழுதுதான் அவன் உள்ளத்தில் முளையெடுத்துக் கொண்டிருக்கிறது. பொதுவாகப் பெண் அழகைக்கண்டு ஏங்கும் பருவம். இன்னும் எந்த குறித்த பெண்ணும் அவனை மயக்கவில்லை. இவ்விருவர் மனத்திலும் இதுவரையிலும் கணம்கூட தென்படாத ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தினால் என்ன செய்கிறார்கள் பார்ப்போமே!"

"நன்றாகப் பார்த்தீர்கள்! எல்லாம் பார்த்துப் பார்த்துத்தான் கிடக்கிறது. உங்களுக்குத்தான் சலிப்பாக இல்லையே!"

"இந்த தினுசு புதிது. இந்த தேசத்தின் கட்டுதிட்டங்களுக்கு அடங்கிய இருவர் இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டாமா?"

"பெண் பாவத்தைக் கட்டிக்கொண்டதெல்லாம் போதாதா? இது பாக்கியாக்கும்?"

2

"பாலு, சற்று உட்காரேன் போகலாம். என்ன அவசரம் இப்பொழுது, பள்ளிக்கூடம் தான் இல்லையே!" என்று கமலம் சோம்பல் முடித்துக்கொண்டே என்றுமில்லாத இளக்கம் நிறைந்த குரலில் சொன்னாள்.

அன்று அங்கு வந்தது முதலே, அவளுடைய தோற்றத்தைக் கண்டதுமுதலே, பாலுவுக்கு ஏதோ ஒரு பதற்றம். எப்பொழுதும் போல அவள் அன்று இல்லை என்று கண்டான்.

"சிநேகிதன் காத்துக்கொண்டிருப்பான் அம்மாமி! இந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு போகட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே ஊஞ்சலிலிருந்து எழுந்தான்.

"சரிதானடா, எல்லாம் போகலாம் சற்று கழித்து, சிநேகிதன் சற்று பார்த்துவிட்டுத் தானே போகிறான். எனக்கு ஒண்டியாக இருக்கிறது."

"மாமா எப்பொழுது வருவார்?"

"எப்பொழுதோ எனக்குத் தெரியாது. இரண்டு நாளாவது ஆகும். உட்காரு, இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லிவிட்டுக் கமலம் எழுந்து உள்ளே போனாள்.

பாலு ஊஞ்சலில் உட்கார்ந்தான். கமலம் எழுந்துபோன வேகத்தில் ஆட ஆரம்பித்த ஊஞ்சல் முன்னும் பின்னுமாகப் போயிற்று. பாலுவும் அத்துடன் முன்னும் பின்னுமாக ஆடினபொழுது அவன் உள்ளமும் முன்னும் பின்னுமாகப் போக ஆரம்பித்தது. சுற்றி சுவர்களைப் பார்த்தான்.

கூடத்தில் எதிரில் ரவிவர்மாவின் மோகினிப் படம் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த வீட்டிற்கு வந்தபொழுதெல்லாம் அவன் அதைப் பார்த்திருக்கிறான். அப்பொழுது பார்த்தபொழுது அவனுக்குத் திடீரென்று ஏதோ கனவுபோன்ற ஒரு தோற்றம் ஏற்பட்டது.

அந்தப் படத்தின் சட்டத்துக்கு வெளியே ஒரு வாலிபன் நின்றான்; படத்தில் இருந்த

மோகினி அவனைப் பார்த்து பேசிக்கொண்டிருந்தாள்.

''பைத்தியமே, ஏனடா இறங்கிப் போகிறாய்? என்னை இந்த நிலையில் பார்த்துப் பரவசமடைவதைக் காட்டிலும் உனக்கென்ன வேலை? உன் யௌவனத்திற்கு?... நான் என்னமோ இன்று மனம் வைத்து இந்த ஊஞ்சலில் இப்படி உட்கார்ந்திருக்கிறேன். அவகாசமும் இடமும் இருக்கிறது. என் உள்ளம் ஒத்து ஆடுகிறது, மெய்யறிவு கூட மங்கி இருக்கிறது. நிர்ப்பந்தமில்லை, வேறு கவலை இல்லை, அச்சமில்லை, அடக்கமும் வெட்கமும் கூடக் கொஞ்சம் அகன்றிருக்கின்றன. ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறேன்! அடே, இந்த நிமிஷம் நேராது. மறுபடியும், சொல்லிவிட்டேன்?... பிறகு வீணாக துக்கப்படாதே! இந்த மட்டிழந்த மோகினியைக் கண்டு பயந்து ஓடாதே! ஓடினால் இந்தப் பேய் உன்னை அடித்துவிடும்!''

படமே உயிர்கொண்ட உருவம் ஊஞ்சலாடுவது போலிருந்தது.

பாலு அதைக் கண்கொட்டாமல் என்பார்களே அந்த மாதிரி பார்த்துக்கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கிறாய்? நானே கூப்பிடுகிறேனே?'' என்று சொல்லி மோகினி தலையை ஆட்டிக் கூப்பிட்டாள்.

"பாலு!''

பாலு தூக்கிவாரிப் போட்டதுபோல குரல் வந்த பக்கம் பார்த்தான்.

படத்திலிருந்த மோகினி நடந்துவருவது போலக் கமலம் வந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய், பாலு? ரொம்ப இறுக்கமாக இருந்தது. குளித்துவிட்டு வேறு புடவை உடுத்திக் கொண்டேன்!'' என்று சொல்லிக்கொண்டே முந்தானையைத் தொங்கவிட்டவண்ணம் தலைமயிரை ஆற்றிக்கொண்டு அவள் அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''நேற்று கொடியில் போட்ட புடவையை விரித்துவிட மறந்துபோய்விட்டேன்—உலரவே இல்லை; ரவிக்கை வெறும் ஈரம். வெயிலில் போட்டிருக்கிறேன். நெற்றிக்கு வைத்துக்கொண்டிருக்கிறேனா, பார்'

பாலு பார்த்துக்கொண்டுதான் இருந்தான்.

"குங்குமம் இருக்கிறது!''

"இப்பொழுது என்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது?'' என்று கமலம் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"மோகினிபோல இருக்கிறது!''

"என்ன, மோகினிபோலா!''

இருவருக்கும் மேலே வார்த்தையே ஓடவில்லை.

அப்பொழுது பாலு திடீரென்று கமலத்தின் முகத்தில் எதைக் கண்டானோ, ஒரு தாவாகத் தாவி ரேழிக்குப் போய்விட்டான்.

''பாலு;'' என்று கமலம் கூப்பிட்டாள்.

"நான் போகிறேன் அம்மாமி!'' என்ற பதில் அவள் காதில் விழுந்தது.

3

"என்னடி கமலம், சாப்பாடாச்சா? உங்கள கத்துக்காரர் ஊரில் இல்லையா? அதான் சாவகாசமாக ஊஞ்சலாடுகிறாய்! உனக்கென்னம்மா'' என்று சொல்லிக்கொண்டு எதிர்வீட்டு சீதா வெற்றிலை வாயுடன் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தாள்.

"வா, சீதா!'' என்று கமலத்தின் வாய் சொல்லிற்று. கைகள் தலைமயிரை முடிந்தன, முந்தானையை இழுத்துக் கட்டின.

"இதென்ன புஸ்தகம்?'' என்று சீதா ஊஞ்சலில் கிடந்ததை எடுத்துப் பார்த்தாள்.

பாலு எடுத்துக்கொண்டு போகாமல் போட்டுவிட்டுப் போய்விட்ட புத்தகத்தைப் பார்த்ததும் சற்று திடுக்கிட்டு கமலம் ''அதா, பங்கிம் சந்திரரின் மாதங்கனி—நாவல்! ' என்றாள்.

"இங்கேன் கிடக்கிறது? படித்துக்கொண்டு இருந்தாயா?''

'இல்லை...அதா ..பாலு...எடுத்துவைத்தான்.'

"இப்பொழுதுதான் போகிறான், பார்த்தேன். மறந்துபோய்விட்டானா? நீகூடப் பார்க்கவில்லையா?''

''என்னவோ பேசிக்கொண்டிருந்தான், நானும் கவனிக்கவில்லை ''

''ஆமாம், அவன் முன்னால் இப்படியா உட்கார்ந்திருந்தாய் கமலம்?''

"என்னடி இப்படிப் பேசுகிறாய் சீதா, பாலு யார்?''

''அது சரிதானடி கமலம். சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை இல்லையோ?''

"அந்தக் கபடமெல்லாம் எனக்குத் தெரியாதம்மா!''

''தெரியாவிட்டால் உலகம் சும்மா இருக்குமோ? நான் ஆனதால் சரியாகப் போச்சு, சேச்சி வந்திருந்தால் இப்போது?''

"வந்திருந்தால் என்ன என்கிறாய்?''

''வந்திருந்தால் என்னவா? உடனே முடிச்சுப் போட்டு விடமாட்டாளோ? கோபித்துக்கொள்ளாதே, கமலம்! நல்லதைத்தான் சொன்னேன்.''

''அவன்—பாலு—என் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்துக்கூடப் பேசுவதில்லை—அவ்வளவு சாது அவன்?''

''கமலம், நாம் இரண்டு பேரும் குட்டிகளாய் இருந்ததுமுதல் கூடி விளையாடி இருக்கிறோம், அசட்டுப் பிசட்டு என்று பேசிக்கூட இருக்கிறோம். ஆகையால் நான் உன்னிடம் சொல்லலாம். பெண் பிள்ளைகளுக்குள் சொல்லிக் கொள்வதில் என்ன!''

"பாலு கெட்ட எண்ணத்துடன் இங்கே வருகிறான் என்கிறாயா, சீதா?''

"இல்லையடி! அவன் இங்கே வந்து உன்னுடன் பேசிப் பழகுவது உனக்குப் பிடித்திருக்கிறது. ஆகையால் அவனிடம் நீ கொஞ்சம் தாராளமாகக் கூடப் பழகுகிறாய். அதனால் அவன் எண்ணம் கெட்டாலும் கெடும், வயதாயிற்றல்லவா?

"அவன்மேல் எனக்கு . ?''

"அவசரப்படாதே. உனக்கு என்றால் உனக்கு என்றுமட்டும் நினைக்காதே! உன்னைப்போல இருக்கிற எல்லோருக்கும் இந்தமாதிரி அழகான பையன் ஒருவன் வந்து சுற்றிக்கொண்டு திரிந்தால் ஏதோவொரு சந்தோஷம் இருக்கத்தான் செய்

யும். எனக்கும் அந்தமாதிரி ஒருசமயம் இருந்தது, தெரியுமா?''

''அதெப்பொழுது?''

''மூன்றும் வருஷம் எங்கள் வீட்டில் ஒரு சப் ரிஜிஸ்ட்ரார் இருந்தாரல்லவா? அவர் பிள்ளை...''

''ஆமாம் லீவுக்கு வந்திருந்தான்!''

''அவன் என்னுடன் பேசுவதில்லை, அவ்வளவு தான். ஆனால் பார்க்கிறபோதெல்லாம் அவனுக்கு ஏதோ சந்தோஷம். எனக்கும் அவன் முன்னால் நடமாடுவது ஒரு இன்பமாகத்தானடி இருந்தது. ஒருநாள் வீட்டில் ஒருவரும் இல்லை. புருஷர்கள் ஆபீஸுக்குப் போய்விட்டார்கள், மற்றும் பெரியவர்கள் ஸ்வாமி தீர்த்தம் கொடுக்கிறது என்று ஸ்நானம் செய்யப் போய்விட்டார்கள். அந்தப் பையன் மாடியில் படித்துக்கொண்டிருந்தான். நான் வாசற்கதவைத் தாளிட்டுக் கொண்டு கிணற்றடியில் குளிக்கப்போனேன். அவன் இருக்கிறதே எனக்குத் தெரியாது. தனியாக இருக்கிறோம் என்று சாவகாசமாக சோப்புத் தேய்த்துக்கொண்டிருந்தேன். என்ன ஆச்சு தெரியுமோ? அவன் திடீரென்று கிணற்றடிக்கு வந்து விட்டான்! என் மானமே போய்விட்டது. அவனும் திண்டாடிப் போய்விட்டான், பாவம்! ஒரு வினாடி அவனால் அசைய முடியவில்லை. நானும் அப்படியே நின்று போனேனடி!''

அவன் வேண்டுமென்றுதான் வந்தானோ என்னவோ? '

''இல்லவே இல்லை. நான் அங்கே இருப்பது அவனுக்குத் தெரிந்திருக்கவே முடியாது. நானும் அவன் வீட்டிலேயே இல்லை என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால்...''

''ஆனால் என்ன?''

''ஆனால் அவன் பார்வை அந்த வினாடி என் மேல்தான் நின்றது. என் தேகம் பூராவும் ஒரு விதமான புல்லரிப்பு. மறுவினாடி அவன் போய் விட்டான். எனக்கும் வெட்கம் வந்தது. இதற்கு என்ன சொல்லுகிறாய்?''

''அப்புறம்?''

''அவ்வளவுதான். அவன் ஊருக்குப் போகிற வரையில் நான் அவன் கண்ணிலேயே படவில்லை. அவனும் வீட்டில் ஏதோ காரணம் சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுவிட்டான்.''

''இப்பொழுது நான் சொல்லட்டுமா, சீதா?''

சீதை கிட்ட நெருங்கி கமலத்தின் தோளில் கைபோட்டுக்கொண்டாள்.

''இன்று என்னமோ ஒரு பைத்தியம். அவன் வந்ததும் போய்க் குளித்துவிட்டு இந்த மாதிரி வந்து அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டேன்.''

''அவன் என்ன பாடுபட்டிருப்பான் தெரியுமா?''

''வேண்டுமென்றே நான் அவனை என் முகத்தைப் பார்க்கச் சொன்னேன்!''

''குங்குமம் இருக்கிறதா பார் என்றுயாக்கும்—ஒன்றும் புதிதல்ல!''

''பார்த்தான். மோகினி போல் இருக்கிறேன் என்றானடி!''

''அவனாகவா?''

''இல்லை, நான் கேட்டேன்!''

''அவன் முகத்தில் அப்பொழுது...''

''சாதுப்பிள்ளையாச்சே!'' என்று சீதா சிரித்துக் கொண்டே கமலத்தை அணைத்துக்கொண்டாள்.

''அவன் தைரியம் என்னைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது என்றாலும் அவன் அந்த மாதிரி ஏதாவது சொல்லவேண்டுமென்றுதான் கேட்டேன்!

''அவனும் திகிலடைந்து போயிருப்பான்!''

''ஒரு நிமிஷம்...''

'ஒன்றுமே ஓடாது!''

''மறு நிமிஷம் அவன் போய்விட்டான்!''

''புத்தகத்தையும் போட்டுவிட்டு!''

நான் செய்ததையும் சொல்லிவிடுகிறேன், சீதா. இனிமேல் என்ன; 'பாலு!' என்று கூப்பிட்டேன்!

''நானாயிருந்தாலும் அப்படித்தான் செய்திருப்பேன்!'

''ஐயோ, அவன் வந்திருந்தால்?''

''அவன் வரமாட்டான்!''

''இனிமேலுமா?''

''வரவேமாட்டான்!''

''நான்...''

''நீயும் இனிமேல் அவன் கண்ணில் படமாட்டாய்!''

''ஆமாம், அவன் முகத்தில் இனி எப்படி விழிப்பதடி?''

''அவனும் அப்படித்தான் யோசிப்பான். இத்துடன் சரி இந்த விசித்திரம்.''

''ஆனால் எவ்வளவு இன்பமாக இருந்தது!''

''இப்படி முடிவடையத்தான்!''

''எனக்கு புத்தி இப்படிப் போகக்கூடாது.''

''உன்மேல் தப்பில்லை, கமலம். அது ஒரு சமயம், அவ்வளவுதான். இனிமேல் நேராது.''

''அவன் என்ன நினைத்துக்கொள்ளுவான்?''

''நீ என்ன நினைப்பாய் என்று அவனும் தவித்துக்கொண்டிருப்பான்.''

''இந்தத் தவிப்பும்கூட ஒருவிதத்தில் சந்தோஷமாக இருக்கிறதடி, சீதா!''

''இந்த உப்புச் சப்பற்ற வாழ்க்கையில் வேறென்ன தான் இருக்கிறது என்கிறாய்?''

''அம்மா, நீ வந்தாயே சமயத்துக்கு!''

4

''உங்கள் ஆராய்ச்சி என்ன ஆயிற்றோ?'' என்று ரதி கும்மாளத்துடன் கேட்டாள்.

''அந்தப் பயல்—பாலு—சுத்த திராபைப் பயல்—பயங்கொள்ளி!''

''ஏன், என்ன ஆச்சு?''

''இன்னும் சிறிது நேரம் அவன் அங்கே அந்த ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தானானால் நான் ஒருகை பார்த்திருப்பேன்!''

''என் உதவி இல்லாமலா? நான்தான் விலகி நின்றுவிட்டேனே! ரதி நான் இல்லாமல் உங்கள் காரியம் பலிக்குமா?''

"ஏன் விலகி நின்றாய்?" என்று மன்மதன் கோபத்துடன் கேட்டான்.

"இந்தக் காதலுக்கு இவ்வளவுதான் வளரும் இடம். இதற்குமேல் இது போகாது. போனால் ரஸாபாஸம்தான்—துக்கம்தான். வீழ்ச்சியின் இன்பம் இதில் கிடைக்காது."

"பயலை அவ்வளவு தூண்டினேன்!"

"அவளும் ஒரு படி தாண்டியே 'பாலு!' என்றுகூடக் கூப்பிட்டுவிட்டாளே!"

'நிமிஷ நேரத்தில் காரியத்தைக் கெடுத்து விட்டான்.'

"இல்லை, அவள் கூப்பிட்டது காதில் பட்டிருந்தாலும்—பட்டிருக்கும்—அவன் வந்திருந்தாலும் அவள் எழுந்து உள்ளே ஓடிப்போயிருப்பாள்!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"அதற்குமேல் அந்த அனுபவத்திற்குமுன் நின்று அதைத் தாங்க அவர்களால் முடியாது!"

"ஏன்?"

"எந்தத் துணிகரமான செயலுக்கும் ஒரு எல்லை இருக்கிறது. அதைத் தாண்ட யாராலும் எந்தத் தூண்டுதல் இருந்தாலும் முடியாது."

"காதலுக்குத்தான் கண் இல்லையே!"

"காதலை அறியாதவர்கள் அப்படிச் சொல்லுவார்கள். காதல் என்ற நெருக்கடியில்தான் கண் கூர்மையாகிறது. அதனால்தான் பாலு எழுந்து ஓடினான். அவன் ஓடியிருக்காவிட்டால் கமலம் ஓடியிருப்பாள். அது சிருஷ்டியின் விதி. அதைத் தடுக்க நம்மால்கூட முடியாது."

"இருந்தாலும் இந்த மாதிரி நிலைகளை உண்டாக்கிக்கொண்டே இருக்கிறேன், பார்ப்போம்!"

"பார்ப்பதென்ன? மோகினி நிலையின் மாயை நீடிக்காது, வானவில்லின் கவர்ச்சியுடன் அது ஒரு கணம்தான் நிற்கும்!"

"அந்தக் கண நேரத்தில் வாலிபனை அடித்து விடும்!"

"திடமுள்ளவன் தப்பித்துக்கொள்ளுவான்!"

ரசிகர்களை சோதித்தால்...?

கதைகளை படித்துவிட்டு அதை எழுதிய எழுத்தாளரிடம் சென்று 'ஆகா, பிரமாதமாக இருந்தது' என்று புகழக்கேட்டு உச்சி மகிழ்ந்து போய் விடுகிற எழுத்தாளர்கள் தான் பெரும்பாலும். ஆனால் உண்மையிலே இந்த சிலாகிப்பு ரசனையிலிருந்து எழுந்ததுதானா, இல்லை ஆளுக்காக, தாங்கள் மதிக்கிற எழுத்தாளர் என்பதற்காக அவர் எழுதினதெல்லாம் தங்கம் என்ற வீரவழிபாடு, மனப்பான்மையில் அள்ளி வீசப்பட்ட புகழுரையா என்று வாசகர்களை சோதிக்கிற எழுத்தாளர்களும் உண்டு. மணிக்கொடி காலத்தில் இந்த வீரவழிபாடு வரவில்லை. சொந்தப் பெயரிலும் புனைபெயரிலும் வந்த கதைகளை படித்து இளம் கண்டுகொண்ட வர்சகர்கள், இன்னாரின் எழுத்துச்சாயல் அடிக்கிறதே என்று கூடச் சொல்லிவிடுவார்கள். எழுத்தாளர்கள் வாசகர்களை ரசனசக்தியை சோதிப்பார்கள். தேடுகிறவர்கள் உண்டு.

'தினமணி கதிர்' நடக்கும்போது பி. எஸ். ராமையா வாரம் தவறாமல் சிறுகதை எழுதிவந்தார். ராமையா அடுத்த தடவை நுழையும்போது கதையைப் பற்றி தினமணி ஆசிரியப்பகுதியில் உள்ள சில நண்பர்கள் அவரைப் பாராட்டுவார்கள். ஒரு வாரம் ஒரு கதையை கொடுத்து இதை 'குருவித்தலை' என்ற புனைபெயரில் வெளியிடு; பார்க்கலாம் இவர்கள் ரசனையை என்றார் வழக்கமாக ராமையா கதைக்கு ஒதுக்கிய முதல்பக்கத்திலே ஆர்ப்பாட்டமாக படம் போட்டுத்தான் அந்த கதை வெளிவந்தது. அந்த நண்பர்கள் 'என்ன இந்த வாரம் ராமையா எழுதவில்லையா என்று கேட்டு உதட்டை பிதுக்கிக்கொண்டு அந்த கதையை தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள்.

சில தினங்கள் கழித்து வந்த ராமையாவிடம் 'என்ன ராமையா, ஏமாற்றி விட்டீர்களே' என்று நண்பர்கள் கேட்டபோது 'ஏன் ஸார், நீங்கள் எல்லாம் ரசிகர்களா? கேட்கிறேன். ஆளுக்காகத் தானே படிக்கிறீர்கள், வெட்கமாக இல்லை' என்றார். அவர்கள் திகைத்துப் போனார்கள். நான் விளக்கினேன். நண்ப ரசிகர்கள் முகத்தில் அசடு வழிய எல்லோருமே சேர்ந்து சிரித்தோம்,

இதே போலத்தான் க. நா, சுப்ரமண்யமும் செய்தார். 'எழுத்து'வில் 'தோப்புச்சாலை' என்று ஒரு கதை ம. கோபாலன் என்ற புனைபெயரில் எழுதினார். ஆனால் எழுத்து புதுப்பத்திரிகை ஆதலால் எச்சரிக்கையுடன் படித்த வாசகர்கள் கதையை வைத்து பாராட்டினார்கள் கேட்ட சிலருக்கு அது க. நா. சு. என்று நான் பின்னால் தெரிவித்தேன்.

இதையெல்லாம் இங்கு சொல்ல நினைப்பு வந்தது சமீபத்தில் நடந்த விஷயம் காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன் 'நசிகேதன்' என்ற பெயரில் 'என்னசெய்ய?' என்ற சிறுகதை 'கல்கி'யில் வெளியாகி இருந்தது. 'நசிகேதன்' யார் என்று எனக்குத் தெரியும். கதையைப் படித்தேன். படித்த வாசகர்களுக்கும் ஞாபகமிருக்கும். கதை சமீப காலத்தில் நான் படித்த குறிப்பிடத்தக்க கதை. கல்கி அதிகம் பேர் பார்க்கிற பத்திரிகை தானே இந்த கதையை படித்தீர்களா என்று சந்தித்தவர்களைக் கேட்டேன். அவர்களில் சிலர் படிக்கவில்லை; படித்தாலும் அதைப்பற்றி நினைக்கவில்லை. க. நா. சுப்ரமண்யம் தான் 'நசிகேதன்' என்று சொன்னதும் க. நா. சு. வா அது, என்று பிறகு புரட்டப்போயிருப்பார்கள். நண்பர் க. நா. சு. வுக்கு நெருங்கிய நண்பர்களிடமே இந்த விளையாட்டு விளையாடுவதில் அதிகம் பிரியம். க. நா. சு. என்றால் பெயரையே பிடிக்காதவர்கள் கதைக்காக வாவது பார்க்கிறார்களா பார்ப்போமே என்றார். அந்த சோதனையும் தோல்வி அடைந்துவிட்டது. இந்த மாதிரி வாசக ரசிகர்கள்!

—சி. சு. செ.

பொய்த்தேவு

சி. சு. செல்லப்பா

சென்ற நவம்பர் மூன்றும் வாரத்தில் மைசூர் சர்வகலாசாலை ஆதரவில் இங்கிலீஷில் நடைபெற்ற நாவல் பற்றிய கருத்தரங்கத்தில் படிக்கப்பட்ட கட்டுரையின் தமிழ் கட்டுரை இது. குறிப்பிட்ட நாவலை படிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெறுத பிற மொழிக்காரர்களுக்கு அறிமுகப்படுத்தி அதன் நயத்தை காட்டும் உத்தேசத்துடன் எழுதப்பட்டது. இந்த கட்டுரையில் நான் குறிப்பிடாமல் விட்டிருப்பவைகளை பிறகு ஒரு கட்டுரையில் எழுத உத்தேசித்திருக்கிறேன்.

—சி. சு. செ.

நான் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருப்பது க நா. சுப்ரமண்யம் எழுதி இருக்கும் 'பொய்த்தேவு' என்கிற தமிழ் நாவல். அவரது நாவல்கள் புத்தகமாக வந்திருப்பவை பன்னிரெண்டு. மூன்று நான்கு நாவல்கள் கைப்பிரதிகளாக இருக்கின்றன என்று நினைக்கிறேன் அவர் ஒரு சிறந்த சிறுகதாசிரியர், விமர்சகரும்கூட. அவரது நாவல்களில் இது தலைசிறந்தது என்று கருதுவதால் அதை எடுத்துக் கொண்டிருக்கிறேன். தமிழ் நாட்டின் தஞ்சை ஜில்லா கிராமத்தின், வாழ்வுத்தரம் மட்டுமின்றி வாழ்வு முறையே கடைகீழ்த் தரமான ஒரு தெருவாசிகளிடையே ஊர்ப் பிரபலம் பெற்ற ஒரு போக்கிரிக்கும் அடங்காப் பிடாரி பெண்பிள்ளைக்கும் பிறந்த சோமு, சோமசுந்தரமுதலியார் ஆகி வாழ்ந்து சோமுப்பண்டாரமாக முடிந்ததுவரை உள்ள ஒரு கால நீட்சி அடங்கிய வாழ்க்கை சரித்திரம் கொண்டதுதான் 'பொய்த்தேவு'. நாவலின் பல்வேறு விசேஷத் தன்மைகளையும் ஆராயுமுன் நாவலின் கதையம்சத்தை சுருக்கமாக தெரிந்துகொண்டு விடுவது உபயோகமானது.

சாத்தனூர் ஒரு மாதிரிக்காட்டான (டிபிகல்) தமிழ் நாட்டு கிராமம். சகல ஜாதியார்களும் ஜாதிக்கேற்ற தொழில்களுடன், தொழில்களுக்கேற்ற மனப்போக்கு, குணம், பண்பு வாய்ந்து ஜாதிவாரியாகக்கூட தெருக்கள் உருவாகி, அவரவர் தனி அக்கறை, கூட்டு அக்கறைகளுக்கு ஏற்ப தங்கள் நிறைகுறைகளோடு ஊரை சிறப்பாக்கியும் குறைப்படுத்தியும் கூடி வாழ்ந்து வரும் ஒரு 'ஸெகுலர்' கிராமம். மேட்டுத் தெருவுக்கும் அங்கே இடம் உண்டு. வாழ்க்கைத் தரத்தில் அடிமட்டத்தில் உள்ள அந்த தெருவார்கள், தங்களைவிட உயர்ந்த மற்ற தெருவார்களுக்கு ஏவல் செய்து பிழைப்பது, குடிப்பது, திருடுவது, மிரட்டுவது, தடியடிக்காரியங்கள் செய்வது இப்படியாக தங்கள் பிழைப்பை நடத்திவருபவர்கள். அங்கே ஒரு பத்திரகாளித் தாய் வள்ளியம்மை, போக்கிரித் தகப்பன் கறுப்பன் ரத்தம் தனக்குள் ஓட, விதைக்கேற்ற சுரையாக தன் இஷ்டப்படி சாத்தனூர் வீதிகளில் திரிந்து அலைகிறான் தந்தையை இழந்து, தாயின் வளர்ப்பில். அந்த சிறு வயதிலேயே அந்த ஊர் எல்லைக்குள் சோமுவுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அறிவின் எல்லைகளைத் தொடத் தூண்டுகின்றன. கனவுகள், ஆசைகள், லட்சியங்கள் என்று இன்னும் உருப்பெறுத லட்சியங்கள் பல அவன் உள்ளத்தில் துளிர்த்துவிட்டன. இதுக்கெல்லாம் மேலாக பணம் என்கிற தெய்வம் அவனை அந்த வயதிலிருந்தே ஆட்கொண்டுவிட்டது—அதன் சக்தியை அப்போதே ஊகித்துவிட்டான். அவன் முதல் ஆசையான சாயவேட்டி ஆசை பென்ஷனர் ரங்காராவ் வீட்டில் வேலைக்கு சேர்ந்ததிலிருந்து நிறைவேறி அது முதல் மேலே மேலே ஆசைகளுக்கும் கனவுகளுக்கும் இடம் கொடுக்கிறது. தாராள புத்தியிலும் தரும சிந்தனையிலும் ஊறிப்போன ரங்காராவ் குடும்பத்துக்கு வந்த ஒரு கொள்ளை ஆபத்தை முன் யோசனையாலும், தைரியத்தாலும் தன் பதினேராவது வயதிலேயே தடுத்து அவர்களுக்கு செய்த உதவியின் விளைவாக அந்த குடும்பத்திலேயே ஒருவனுகி விட்டான்.

இந்த வாய்ப்பு அவனுடைய சிறு வயது கனவுகள் ஆசைகளை எல்லாம் பூர்த்தி செய்துவிட, இவை மறைந்த இடத்திலே ஆயிரம் ஆசைகள் தழைத்துவிட்டன. எழுதப் படிக்க ஆசைப்பட்டு, நாலு வருஷம் கற்று, போதும் என்று நிறுத்திக் கொண்ட சோமு, தன்னை போஷித்த ரங்காராவ் தம்பதிகள் இறக்கவும், அவர்கள் மகள் கங்காபாய் அவள் கணவன் சாம்பமூர்த்திராவ் ஆதரவில் தன் புதிய ஆசைகளுடன் வளர்கிறுன். சோமுவின் தாயும் இறந்துவிட, இருபது வயதான சோமுவுக்கு சந்தர்ப்பம் பாலுணர்வுக்கும் வழிசெய்து விடுகிறது. மணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான, அவனைவிட மூன்று நான்கு வயது மூத்த பாப்பாத்திக்கும் சோமுவுக்கும் ஏற்படுகிற முறைபிசகான உறவு, மேட்டுத் தெருவில் பிறந்த சோமு அந்த தெருவுக்கே உரிய குணுதிசயங்களுக்கு ஏதோ ஓரளவு விதிவிலக்காக இருந்தாலும் அவனும் மேட்டுத் தெருக்காரன் என்பதை சுட்டிக்காட்டியது. இது முதல் பணத்தாசைபோல பெண்ணாசையும் சோமுவின் வாழ்க்கையில் ஆட்சி செலுத்த ஆரம்பித்தது.

அவனது இந்த விபரீதப் போக்கை கண்ட சாம்பமூர்த்திராவ் அவனுக்கு ஒரு பெண்ணை

மணம் செய்து வைத்தும் சோமு மீனாட்சியையும் மதிக்காமல் தன் வழியே போய்க் கொண்டிருந்தான். குடிவேறு சேர்கிறது. ஒரு குழந்தையை தந்துவிட்டு மீனாட்சி ஒன்பது வருஷத்தில் இறந்து விட குழந்தை நடராஜனுக்கு ஆதரவாக பாப்பாத்தியை சோமு வீட்டோடு சேர்த்துக்கொண்டு விட கணவனும் மனைவியுமாக வாழத் தொடங்குகிறார்கள். 'கருப்பன் மகனா' இப்படி நல்ல பெயர் எடுத்தான் அன்று என்று அதிசயித்த ஊர்வாய்கள் 'கருப்பன் மகன்தானே, பின் வேறெப்படி' என்று உதட்டைப் பிதுக்கின. இந்த நிலைமைக்கு வந்துவிட்ட சோமுவை மீட்க எண்ணி, நன்றி உணர்ச்சியால் கடமை நினைவு கொண்டிருந்த சாம்பமூர்த்திராவ் தம்பதிகள் தாங்களே முதல் போட்டு சோமுவுக்கு மளிகைக்கடை வைத்துக் கொடுக்கிறார்கள்.

மளிகைக் கடை திறக்கப்பட்டதிலிருந்து சோமு புது மனிதன் ஆகிவிட்டான். வியாபாரமும் சம்பாதிப்புமே அவன் ஒரே லட்சியமாகிவிட்டன. சோமு சில வருஷங்களில் சோமசுந்தர முதலியாராக, ஊர்ப்பிரமுகர்களில் ஒருவராக ஆனது ஊருக்கே வியப்பு. 'சோமு சாதாரண ஆசாமி இல்லை' என்று பேச்சு. இனி, ஊருக்கு ரயில்வே ஸ்டேஷன் ஏற்பட அவர் முயற்சி எடுத்துக்கொண்டதிலிருந்து அவரது ஊர்ப்பொது வாழ்வு ஆரம்பமாகிறது. சோமசுந்தர முதலியாருக்கு அதிர்ஷ்டமா, சாமர்த்தியமா? தொட்டது துலங்கியது. கும்பகோணத்தில் ஒரு கடை, பாங்கியில் கணக்கு, இங்கிலீஷ் எழுதப்படிக்க கற்றுக்கொண்டது, வெளிநாட்டில் பணம் சம்பாதித்து ஊர்திரும்பிய அக்கரைப் பிள்ளையைப் பார்த்து நாகரிகம் கற்றுக்கொண்டது கூட்டாக பஸ் சர்வீஸ் அதைவிட்டு இன்ஷூரன்ஸ் ஏஜண்ட், கார் வாங்கிதானே ஓட்டியது, இப்படி முன்னேற்றம். பணம் அவரைத் தேடி வந்தது. இதுவரையிலும் சாத்தனூர் மேட்டுத்தெரு வீட்டு நினைப்பு மாறாது இருந்தவருக்கு கும்பகோணத்துக்கு வீடு கட்டி குடிப்போகும் நினைப்பு எழுகிறது. சாத்தனூரில் நிலம் வாங்கிவிட்டால் தன் அடிமைத் தனத்தை நிலைநிறுத்திக்கொள்ள ஏற்பட்டு விடுமோ? என்ற பயத்தில், நிலத்தைவிட பணமே சிறந்தது என்று அவர் முடிவுகட்டி இருந்ததில், அவர் ஒரு சாத்தனூர் மிராசுதார் ஆக விரும்பவில்லை; ஆனாலும் மேட்டுத்தெரு வீட்டையும் விட விரும்பவில்லை சகோதர வியாபாரி ஒருவர் தூண்டிவிட்ட நகர வாழ்வு ஆசையும் உள்ளூர அதே சமயம் புகைகிறது.

இந்த சமயம் தாராள மனப்பான்மைக்கும், தர்மத்துக்கும் பலியாகி சாம்பமூர்த்தி ராவ் சொத்தும்போய் மனைவியை இழந்து, மன உளைச்சலால் தடுமாறி தஞ்சாவூரில் நெறி தவறி அலையக்கண்ட சோமசுந்தர முதலியார் தன்னை ராயரோடு ஒப்பிட்டுக்கொள்கையில், அப்போதைக்கு வழுக்கி விழுந்தாலும் சேமித்து வைத்திருந்த ஆத்மபலம் ராயருக்கு எப்படியும் கை கொடுக்கும், அவரை காப்பாற்றும் என்று முடிவு கட்டி, தான் இன்னமும் பூரண மனிதராக ஆக முடியவில்லையே என்று நினைக்கிறார். ராயரின் குறைகளை தான் பின்பற்ற முடிந்தது. அவரது நிறைகளை தான் கடைப்பிடிக்க முடியவில்லை. ராயரை சந்தித்த இடத்தில் ஆத்ம பலம் முதலியாருக்கு இல்லாத நிலையில் பதினைந்து வருஷ இடைவெளிக்குப் பிறகு அந்த வயதிலும் பெண் மயக்கத்தில் விழுகிறார். தான் உறவு கொண்டிருந்த தாசி பாலாம்பாளை முதலியாருக்கு அறிமுகப்படுத்திய ராயரின் ஆத்மா சீக்கிரமே சுய ஒளிபெற்று அவர் பாண்டுரங்க பக்தியில் தன்னை மறக்கப்போய்விட அவர் காட்டிய குழியில் விழுந்துவிடுகிறார் முதலியார். பணமும் பெண்ணும் பிசாசாக ஆட்ட முதலியார் மேலே மேலே படியேறுகிறார். தன் காரியத்தை சாதித்துக் கொள்ள எதையும் செய்யத் தயாராக இருந்த ரங்காச்சாரியார் அவர் மனைவி கோமளவல்லி உறவு அவரை இன்னும் கீழே தள்ளுகிறது. குடி, சிகரெட் சேர்கிறது தொடர்ந்து அவரது வாழ்வில் அடுத்த கட்ட ஆரம்பம்—கதரில் ஸூட் உடை, வியாபாரிகள் மளிகை லிமிடெட் ஸ்தாபன மானேஜிங் டைரக்டர் பதவி, நிறைய சம்பளம், கும்பகோணத்தில் வீடு கட்டுதல். இதற்கிடையே தன் மகன் நடராஜன் உதவாக்கரையாக வளர்வது அவருக்கு தைக்கிறது,

இந்த சமயம் பாப்பாத்தி அம்மாள் இறந்து விட, சாம்பமூர்த்தி ராயரும் பண்டரிபுரம் போய் விடவே, பாப்பாத்தி மரணத்தால் மேட்டுத் தெருவுடன் தன்னை பிணைத்த முக்கிய தளை அறுந்து விட்டதாக எண்ணிய முதலியார் ராயர் போய் விட்டதுடன் சாத்தனூருடன் தன்னைப் பிணைத்த கடைசித் தளையும் அறுந்துவிட்டதாக உணர்கிறார். மேட்டுத் தெருவிலிருந்து தனக்கு விடுதலை கிடைத்துவிட்டது' இந்த சமயம்தான் கும்பகோணம் வீடு பூர்த்தியாகி கிருகப்ரவேசம். முதலியார் கும்பகோண வாசி ஆகிறார். அவரது பக்கத்து பங்களாவிலே தாசி பாலம்பாள் சகோதரிகளுக்கு தனி பங்களா. பணமும் பெண்களுமாக முதலியாரின் கும்பகோண வாழ்விடையே ஒரு தகவல் கிடைக்கிறது அவருக்கு. சாம்பமூர்த்திராயர் பண்டரிபுரம் போனதுமே பண்டரிநாதன் காலடியிலேயே உயிரை விட்டதாக கிடைத்த செய்தி–எதிர்பாராது வந்த செய்தி மனதை கலக்குகிறது.

இருந்தாலும் பணத் தெய்வம் அவருடைய சக்திகளை எல்லாம் ஒரு முகமாக இயக்கிக்கொண்டிருந்தது. பலனை நல்ல அறுவடை செய்து கொண்டே வந்தார். சாத்தனூரிலே சிறு வயதிலே நின்று நிதானித்து சிந்திக்க முடிந்த சோமசுந்தர முதலியாருக்கு இப்போதுதான் நின்று சிந்திக்க அவகாசம் கிடைத்தது. ஆசையும் கனவுகளும் லட்சியங்களும் அன்று ஓடின இதயத்திலே இப்போது ராக்ஷஸ ரூபம்கொண்டு சிந்தனைகள் மோதின. சாம்பமூர்த்திராயர் மரணம் முதல் அடி. அடுத்து அவர் மகன் நடராஜன் போக்கு. தகப்பனைப்போல பிள்ளை என்று ஊரார்

பேச்சு அவர் வரைக்கும் எட்டிவிட்டது. மேட்டுத் தெருவிலிருந்து வெகுதூரம் தான் வந்துவிட்டாலும் தன் வரையில் அவை அழியாமல் நிலைத்துவிட்ட உண்மைகள் என்பதை அவர் உணர அவர் மகன் காரியங்கள் செய்துகொண்டிருந்தான். தான் எங்கு ஓடினுலும் தன் பழய இடத்திலிருந்து விடுதலை கிடைக்காதுபோல் பட்டது அவருக்கு. மனதில் ஒய்ச்சல் ஏற்படுகிறது. உடம்பிலும் தளர்ச்சியை உணருகிருர். தன் தோல்வி அவருக்கு படுகிறது ஆனல் சம்பாத்ய வேகம் மட்டும் குறையவில்லை கிரோஸின் ஏஜன்ஸி, பின் பெட்ரோல் ஏஜன்ஸி, சபாவோடு உறவு பிறகு மேலே மேலே திட்டங்கள் போட்டு வருகையில் யுத்தம் வந்துவிட, சம்பாத்ய வேகம் துரிதப்பட்டது. அந்த வேகத்திலே அரிசிக்கட்டுப்பாட்டு விதியை அவர் மீறிவிட்டதாக வழக்கு தொடரப்பட்டதும் தான் அவருக்கு மறுபடியும் நின்று சிந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. தான் உறவு கொண்டிருந்த பெண்களுடன் தன் மகனே உறவு கொண்டிருந்ததை நேரிலேயே பார்த்துவிட்டபோது அவருக்கு கண் இருட்டுகிறது; கண்ணும் திறக்கிறது. தன் சொத்தில் பெரும் பகுதியை சாத்தனூர் கோயிலுக்கு எழுதிவைத்துவிட்டு மீதியை எப்படி எப்படியோ விநியோகித்து உயில் எழுதிவைத்து விட்டு தனக்கு அளிக்கப்பட்ட ஏழுமாத சிறை தண்டனையை அனுபவிக்கத் தயாராகிருர். அனுபவித்துவிட்டு வெளி வந்ததும் தான் தான் மேட்டுத் தெருவிலிருந்து விடுதலை பெற்ற உணர்ச்சி ஏற்படுகிறது அவருக்கு. சிறு வயதில் கேட்ட சாத்தனூர் கோவில் மணி காதுகளில் ஒலிப்பது போல் இருந்தது. தோளில் இருந்த துண்டும் அனவச்யம் என்று எறிந்துவிட்டு இடுப்பில் நாலுமுழ கதர் வேஷ்டியுடனும் வய சால் துவண்ட உடலுடனும் உள்ளத்தில் கனிந்திருந்த சிந்தனைகளுடனும் கிழக்கு நோக்கி அதாவது தன் கிராமமான சாத்தனூருக்கு எதிர் திசையில் நடந்து சென்ருர். கொஞ்ச நாள் கழித்து சோமு சுந்தர முதலியார், சோமுப் பண்டாரமாக சாலையோரத்தில் செத்துக்கிடந்தார். அவர் செத்துக் கிடந்த ஊரின் பெயரும் சாத்தனூர்தான். ஆனல் சோமு பிறந்த சாத்தனூர் இல்லை. எதிர் திசையில் உள்ள வேறு ஒரு சாத்தனூர். 'அந்த சாத்தனூரிலும் ஒரு மேட்டுத்தெரு இருந்தது' என்று கதை முடிகிறது.

2

இதுதான் 'பொய்த்தேவு' கதை. இந்த நாவலை நான் ஆராய முற்பட்டதில் இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தமிழில் முதல் நாவல் சென்ற நூற்ருண்டில் தோன்றினது முதல் இன்று பத்திரிகைகளில் தொடராக வரும் நாவல்கள் வரை வெளி வந்துள்ளவைகளிலிருந்து இந்த நாவல் தனித்து நிற்கிறது. அடுத்து இது தமிழ் நாவலுக்கு தன் பங்கை கணிசமாகவே செலுத்தியிருக்கிறது என்பது. 1946ல் புத்தகமாக வந்த இந்த நாவல் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. ஆசிரியரின் இரண்டாவது நாவல். இதைப் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்குமுன் நான் படித்த, தமிழில் இலக்கியத்தரமானது என்று குறிப்பிடத்தக்க நாவல்கள் அதிகமாகச் சொன்னுலும் ஐந்தாறுக்குமேல் இல்லை. தமிழில் சிறுகதை சிறந்த வளம்பெற்றிருக்கிற அளவுக்கு, நாவல் துறையில் இன்றுவரைகூட ஒரு பத்துப் பன்னிரெண்டுக்கு மேல் சுட்டிக்காட்டுவதுக்கு நாவல்கள் இல்லை என்பதும் கூட. எனவே தமிழ் நாவல் துறையில் இதுக்கு உரிய இடத்தை கணிப்பது சிரமமான காரியமாக இல்லை. இந்த நாவலுக்கு முன், சென்ற நூற்ருண்டின் இறுதியில் எழுதப்பட்ட கமலாம்பாள் சரித்திரம் (பி. ஆர். ராஜம் அய்யர்) பத்மாவதி சரித்திரம் (அ. மாதவையா), முருகன் ஒரு உழவன், தேசபக்தன் கந்தன் (கே. எஸ். வெங்கடரமணி—முதலில் இங்கிலீஷில் எழுதப்பட்டவை) சுந்தரி (வ. ரா), மண்ணுரை (சங்கரராம்-முதலில் இங்கிலீஷில் எழுதப்பட்டது) நாகம்மா ஆர். ஷண்முக சுந்தரம்) ஆகியவைதான் அன்று பேசிக்கொள்ளப்பட்ட நாவல்கள் இவைகளுக்கெல்லாம் முந்தின பிரதாப முதலியார் சரித்திரம் (அ. வேதநாயகம் பிள்ளை) தான் தமிழ் நாவல் இலக்கியத்துக்கு வழி அமைத்தது என்ருலும் அது ஒரு கிரானிகிளாக இருந்துவிட்டதாலும் இலக்கியத்தரமான நாவல் என்று சொல்வதற்கு உரிய அம்சங்கள் இல்லாததாலும், நான் இந்த பட்டியலில் சேர்க்கவில்லை.

வேதாந்தியான பி. ஆர். ராஜம் அய்யர் தன் நாவலுக்கு, 'இவ்வுலகில் உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா பல கஷ்டங்களை அனுபவித்து கடைசியாக நிர்மலமான ஒரு இன்பநிலை அடைந்ததை விவரிப்பதே இந்த நவீனத்தின் முக்கிய நோக்கம்' என்று குறிக்கோள் வகுத்துக் கொண்டார். மாதவையாவோ 'இதன் உட்கிடைகளைப்பற்றி உள்ளத்தில் ஊன்றி நினைத்துப் பார்த்து முடிவான தீர்மானங்களை செய்வது நமது ஜன சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். இவ்வழக்கங்களைப் பற்றி ஆழ்ந்து ஆலோசனை செய்வாராயின் என் சிரமத்துக்கு போதிய கைமாறு ஆகும்' என்று சீர்திருத்த நோக்கு கொண்டிருந்தார். இவர்களுக்குப் பின் கே. எஸ். வெங்கடரமணி சமுதாய நோக்கு கொண்டு தேச விடுதலை, பொருளாதார சுபிட்சம் இவைகளை விஷயமாகக் கொண்டு எழுதினர். அநேகமாக அதே பார்வையில்தான் சங்கரராம் நாவலும். வ. ரா.வின் சுந்தரி விதவை பிரச்னையை எடுத்துக்கொண்டு சீர்திருத்த நோக்கு காட்டிய நாவல். இந்த நாவல்கள் பெரும்பாலும் தங்கள் உத்தேசங்களை அப்பட்டமாகக் கொண்டு, அப்பட்டமாகவே சித்தரிக்கப்பட்டவையும் கூட. ஆனல் இவைகளின் உத்தேசம் எப்படி எப்படியோ இருந்தாலும் இலக்கியத் தரமானவை என்று சொல்லும்படியாக வடிவ அமைதி கலைத் தன்மை, வெளியீட்டுத் திறன் காட்டுபவையே. தமிழ் நாவலுக்கு அஸ்திவாரம் போட்டவை. இந்த நாவல்களைப் பற்றி மொத்தமாகச் சொல்லத் தோன்றுவது இதுதான். குடும்ப, சமூக, சமுதாய பிரச்னைகளே இவைகளுக்கு அடிப்படை

யாக இருந்திருக்கிறது. தத்துவ, சீர்திருத்த, பொருளாதார உத்தேசங்களே அடிநாதமாக இருந்திருக்கிறது. வெளியே இருந்துவரும் அழுத்தங்களால் பாதிக்கப்பட்டு அந்த தூல நிகழ்ச்சிகளால் கட்டுப்படுத்தப்பட்டு அதனால் தங்கள் செய்கைகளை உருவாக்கிச் செல்லும் போக்கை இவைகளில் காணலாம். இன்னொன்று, இவைகளின் விஷய உள்ளடக்கம் ஒரு பிறை வடிவு வாழ்க்கையை சித்தரிப்பவையே. முழு வட்ட வடிவமான வாழ்க்கை ,சித்தரிப்பு என்று சொல்ல முடியாது. வீச்சு (range) மட்டுப்படுத்திக் கொள்ளப்பட்ட நாவல்கள்.

ஆனால் 'பொய்த்தேவு' முழு வட்டவடிவமான சித்தரிப்பு நாவல். ,மேலே குறிப்பிட்ட நாவல்களைவிட கூடுதலான உத்தேசம் கொண்டிருப்பதை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயத்திலிருந்தும் அடக்கப்பட்டிருக்கும் பொருளிலிருந்தும் நாம் பார்க்க முடியாது. தான் இன்னும் 'பூரண மனிதனாக ஆக முடியவில்லையே' என்று மற்றொருவருடன் தன்னை ஒப்பிட்டு தன் மீது குறைப்பட்டுக் கொள்ளும் சோமு முதலியார் பாத்திரத்தை ஒரு பூரணமான மனிதனாகவே நமக்கு சித்தரித்துக் காட்டி இருக்கிறார் நாவலாசிரியர். சோமு முதலியார் ஒரு காவிய கதாநாயகன்; பொய்த்தேவு ஒரு காவிய நாவல். இதை படித்து முடிகிறபோது ஒரு ராமாயணத்தையோ சிலப்பதிகாரத்தையோ படித்து முடித்த திருப்தி ஏற்படுகிறது. காரணம் அதில் காணப்படுகிற நிறைவுதான். பிறப்பு முதல் இறப்பு வரையில் ஒரு கதா பாத்திரத்தின் வாழ்க்கை மேடு பள்ளங்களுடன் சித்தரிக்கப்படுகிறது என்பதால் மட்டும் இல்லை. ஒரு முழு வாழ்வின் மனப்போக்கை, புறமும் அகமும் அவ்வப்போதய சூழ்நிலை பகைப் புலத்துக்கு ஏற்ப பாதிக்கப்பட்டு ஏற்படுகிற மோதல்கள் விளைவிக்கிற அறிவு, காட்டுகிற மனப்பாங்கு இவைகளையும் இவை விளைவாக ஒரு உச்ச கட்ட வாழ்வில் அந்த பாத்திரம் முற்றுப்பெறுகிறதையும் நாம் உணர்கிறோம். கதாநாயகனுக்குள்ளே ஓடிய அசுர கணங்கள், ஆனால் அவன் தெய்வ கணங்கள் என்று முடிவுகட்டி இருந்தவை, அவனை வீழ்த்துகிறபோது ஒரு பெரிய வீழ்ச்சியை பார்க்கிறோம். அதே சமயம் அவன் வீழ்ந்த விநாடியே அவன் எழுந்துவிட்டதையும் பார்க்கிறோம். அரிசிக் கட்டுப்பாடை மீறி சிறைசென்றதும், தன் மகன் தன்னை மிஞ்சிவிட்டதும் அவருக்கு லோகாயதமான ,வீழ்ச்சி; கோவிலுக்கு சொத்து முழுவதையும் எழுதிவைத்துவிட்டு சோமுப் பண்டாரமாக ஆனது அவருக்கு ஆன்மீக எழுச்சி.

ஆனால் சோமு முதலியார் ஒரு சோக கதாநாயகன் இல்லை; தன் குறைபாடுகளால் தன் விதியை நிர்ணயித்துக் கொண்டவரும் இல்லை. அவர் பிறந்தபோது அவருக்கு இழப்பதற்கு எதுவும் இல்லை. குறைகளோடு தான் அவர் வாழ்வே ஆரம்பம். அந்த குறைகளே குணமானவை என்று எடுத்துக்கொண்டு விட்டதுதானே சோமுவின் வாழ்வுப் பார்வை. க. நா. சு. வே நாவலில் சொல்லி இருப்பதுபோல் 'சோமு முதலியார் தாந்தோன்றி; வேரில்லாத மரம். அது அற்புதமாக எப்படியோ தழைத்து கிளைத்து பழுத்து பலன் தந்துகொண்டிருந்தது.' எனவே சோமுவின் வாழ்வு கிடைத்த வரைக்கும் தனக்கு அப்போதைக்கு லாபம் என்று கருதிய வாழ்வு மொத்தக் கணக்கு கடைசியில் பார்க்கப்படுகிற போதுதான் லாபமா நஷ்டமா என்பது அவருக்கு படுகிறது. ஆக, சோமுப் பண்டாரமாக அவர் சாலையில் அறுபது வயது சமயத்தில் செத்துக் கிடந்தது சோகமான முடிவு இல்லை. சிறையை விட்டு வந்ததும் தன் மேல்துண்டையும் எறிந்து விட்டு நடக்கிறபோது சோமு முதலியார் நிறைவான வாழ்வுப் பாத்திரமாக ஆகிவிட்டார். புயல் வாழ்வு ஓய்ந்து அமைதி பெற்ற ஒரு முற்றுப் பெற்ற நிலை அப்போதே அவருக்கு ஏற்பட்டு விடுகிறது அதுக்குப் பிறகு அவர் சாவு வெறும் ஸ்தூலமான மறைவுதான்.

இந்த நாவலுக்கு விஷயமாக, பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டது ஒரு லோகாயத வெறி வாழ்வு வாழ்ந்து ஆன்மீக வாழ்விலே முடிந்த ஒரு ஆத்மாவின் யாத்திரை ஆகும். 'கமலாம்பாள் சரித்திரம்' ஆசிரியர் பி. ஆர். ராஜம் அய்யர், தன் உத்தேசத்தை தெரிவிக்கையில், 'உலகத்திலே உழன்று தவிக்கும் ஒரு அமைதியற்ற ஆத்மா கஷ்டங்களை அனுபவித்து நிர்மலமான இன்ப நிலையை அடைந்ததை விவரிப்பதே இந்த நவீனத்தின் நோக்கம்' என்கிறார். ஆனால் 'பொய்த்தேவு'வின் நோக்கம் வேறுவிதமானது. 'பேதமையில் பிறந்த ஆத்மா உண்மையான இன்பம் எது என்பதை அறியும் சக்தி இல்லாமல், ஏதேதையோ மதித்து பின் சென்று உலகத்து குறுக்கோட்ட சுழல்களில் சிக்கி, தடுமாறி அநேகமாக கோடிவரை தடம் தவறிச்சென்றுவிட்டு, மெய்யுணர்த்தல் வருகிறபோது மேலே எதுவும் செய்யத் தோன்றாத நிலையில் ஓய்ந்து ஸ்தம்பித்துப் போய்விடுகிற, விரக்தி நிலையை அடைய ஏற்படுகிற ஒரு அனுபவத்தையே இந்த நாவல் விவரிக்கிறது. 'அடிப்படையான சில வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துச் சொல்ல இன்றைய மனிதனை சோமுவின் 'வாழ்க்கைச் சரிதம் எனக்குப் பெரிதும் உதவிற்று' என்கிறார் க. நா. சு. உண்மை, அடிப்படை வாழ்க்கைத் தத்துவங்களை தன் நரம்புகளில் உணராததால் ஒரு எதிர் மறையான வாழ்வையே லட்சியமாகக் கொண்டு வாஸ்தவமான வாழ்வு வாழ முடியாமல் போய் விட்டது சோமசுந்தர முதலியாருக்கு.

தாமஸ் ஹார்டி தன் 'டெஸ்' நாவல் முகவுரையில்,

'As flies to wanton boys are we to the Gods. They kill us for their sport.'

என்று தன் நாவலுக்கு ஒரு அர்த்தம் (significance) கொடுக்கும் ஷேக்ஸ்பியர் வரிகளை மேற்கோள் கொண்டது போல க. நா. சுப்ர

மண்யம் தன் 'பொய்த்தேவு' முகவுரையில்,

'அத்தேவர் தேவரவர் தேவர் என்றிங்ஙண்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற
பூதலத்தே'

என்கிற, தமிழ் ஞானி மாணிக்கவாசகரின் 'திருவாசகம்' வரிகளை மேற்கோள் காட்டி இருக்கிறார். அவருடைய நாவலுக்கு தலைப்பே அதில் வரும் 'பொய்த்தேவு' என்கிற சொல்தான். அவர் சொல்கிறார் :

'இன்று மனிதனுக்குத் தெய்வம் ஓர் இன்றியமையாத சாதனமாகிவிட்டது. நாத்தழும்பேற நாத்திகம் பேசுகிறவனுக்குங்கூட, ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்போது, தெய்வம் அவசியமாகத்தான் தோன்றுகிறது. மனிதனுக்கு ஒரு தெய்வம் திருப்தி அளிப்பதில்லை. பல தெய்வங்கள் தேவையாக இருக்கின்றன. ஒவ்வொரு விநாடிக்கும் ஒரு தெய்வம் தேவையாக இருக்கிறது என்று சொல்வதும் மிகை ஆகாது. இந்த விநாடியின் ஒரே தெய்வம் அடுத்த விநாடி பொய்த்துவிடுகிறது; பொய்த்தேவாக ஆகிவிடுகிறது.'

இதில் குறிப்பிட்டிருக்கிற மாதிரி அப்போதைக்கு அப்போது தேவைக்கு ஏற்ப பொய்த் தெய்வங்களை சிருஷ்டித்து வழிபட்டுக் கொண்டு வந்த வாழ்வுதான் சோமசுந்தர முதலியார் வாழ்வு. அவரே சொல்கிறார் :

'எனக்கென்னவோ கும்பிடணும் அர்ச்சனை செய்யணும்னு நாம்ப எல்லோரும் நம்ம பணப் பெட்டிக்கும் பாங்கிப் புஸ்தகத்துக்கும்தான் அதெல்லாம் செய்யலாமே தவிர கோவிலுக்குப் போகக் கூடாதுன்னு தோணுது. உலகத்திலே வேறே எது ஸார் தெய்வம்? பணம் என்கிற ஒன்று தான் தெய்வம் — கண்ணாலே காண்ற தெய்வம்; வேறு தெய்வம் உண்டென்று சொல்கிறவர்கள் பொய் சொல்கிறார்கள். அசடர்கள், பைத்தியக்காரர்கள், உண்மைத் தெய்வத்தை மறைப்பதற்காக பொய்த் தெய்வங்களை உண்டாக்கி பூசை வேறு செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்.'

சோமு முதலியாருக்கு கோவில் தெய்வங்கள் பொய்; பணம் அதை ஒட்டிய இன்பங்கள் நிஜம். சாத்தனூர் கோவில் மணியின் நாதம் சோமு சிறு வயதிலே காதில் ஒலித்தது மனதில் பதிந்திருந்தாலும், அவனுக்கு கிட்டின கோவில் கர்ப்பக்கிரகத்தின் மூல விக்ரகத்தின் உருவம் அவன் கண்களில் பதியவில்லை; அன்றய நிலையில் அவனுக்கு கிட்டாத தெய்வமான ஒரு தம்பிடியின் உருவம்தான் பதிந்து இருந்தது. உண்டியல் பெட்டிக்குள் சலசலக்கும் நாணயங்களின் ஒலிதான் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். எனவே 'மேமன்' வழிபாடுக்காரரான அவருக்கு எதுபொய், எது நிஜம் என்று தன் வாழ்வின் கடைக்கோடியில் திடீர் விழிப்பாக வருகிறது. கோவில் தெய்வங்கள்தான் நிஜம் என்று அவர் முடிவுக்கு வந்தாரோ இல்லையோ தெரியாது (அவர் தன் சொத்தை கோயிலுக்கு எழுதிவைத்ததிலிருந்து நாம் அனுமானித்துக் கொள்ளலாம் தான் இது வரை வழிபட்டவைகள் பொய்த் தெய்வங்கள் என்பது அந்திம ஞானோதயமாக அவருக்கு ஏற்பட்டது. ஆனாலும் என்ன? வாழ்வு அவரை மறு விளிம்புக்கு கொண்டுபோய்விட்ட பிறகு அவர் எதுக்கும் திரும்ப முடியாது. ஆகவே சோமுப் பண்டாரமாகவே அவர் சாகிறார். சாகுமுன் அவர் இன்னொரு பண்டாரத்திடம் சொல்கிறார் :

'தெய்வங்கள் முப்பத்து முக்கோடி மட்டுமில்லே, முப்பத்து முக்கோடி முப்பத்து முக்கோடியா எத்தனையோ முப்பத்து முக்கோடி தெய்வம் இருக்கு. உலகம் பொறந்த நாள் முதல் இன்னிவரையில் எவ்வளவு விநாடி உண்டோ அவ்வளவு தெய்வமும் உண்டு. இனி இருக்கப்போகிற விநாடிக்கும் விநாடிக்கொரு தெய்வம் உண்டு.'

கேட்டுக் கொண்டிருந்த பண்டாரத்துக்கு இது புரியாவிட்டாலும் விவரம் தெரிய வந்த நாள் முதலான சோமசுந்தர முதலியாரின் வாழ்க்கையை விநாடிக் கணக்கான அளவு வளர்ச்சி

பகைத் தொழில்

சி சு. செ.

'கிழிபடுபோர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியலதனில்'
கொலைவழி உதறி அறவழியாலே
கதிகாண வழிவகை காட்டிக் கிழக்கே
பகைத்தொழில் மறக்கவைத்த முதல்வன்
ஒத்துழையாமையான் காலமும் போச்சு;
அழிசெய் நியூகிளியர் ஆயுதம்
ஓங்கியே சீறிடும் 'ரட்சகர்' கையில்
அருள்வழி சிதற மறவழி பற்றி
கதிகலங்கச் சதிவகைகள் செய்து
கொடுந்தொழில் பரவச் செய்யும் மேற்கே
ஒத்துப்போகார் காலமும் ஆச்சு!
என்று நாம் கணித்திருக்கும் வேளை
அண்டை நட்பும் சகவாழ்வும் கானல் நீராச்சு;
வரம்கொடுத்த தலைமேலே கைவைக்க எல்லையில்
முழுவடிவைத் தின்ன வந்த பிறைவடிவோன்,
:பாய் :பாய் குளிரப்பேசி பழமை பாசம் பேசி
பசப்பி விளிம்பில் இமயப்பாய் சுருட்ட
வந்தோன்,
சுயாட்சிக்குத் தந்த ஆதரவு மறந்து நடுக்கடலில்
நின்று
ஊளையிடும் நம்பெயர் பாதிகொண்ட
உதிரித்தீவோன்,
முக்கூட்டாய் சேர்ந்து பகைத் தொழில் வளர்க்க
புறப்பட்ட கதையே இன்றய நிஜமாச்சு.
உழக்கிலே கிழக்கு மேற்கா ?
கிழக்கிலும் மேற்கு, மேற்கிலும் கிழக்கு
பகைத் தொழிலுக்கா காலம் ?

யுடன் நாம் தொடர்ந்து பார்த்து வந்ததிலிருந்து நமக்குப் புரிகிறது. வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் மனிதனுக்குப் புதுசு. அவன் ஆசைகளும், கனவுகளும் லட்சியங்களும் விநாடிக்கு விநாடி பிறக்கின்றன, மாறுகின்றன, மறைகின்றன. எனவே 'மனிதனின் ஆசைகளுக்கும், கனவுகளுக்கும் லட்சியங்களுக்கும் உருவே பெருத பல சிந்தனைகளுக்கு தெய்வங்கள் என்று பெயர் தருவதே சரியான விஷயம்' என்று ஆசிரியரே இன்றய மனித மனநிலை பற்றி ஐரானிகலாக குறிப்பிட்டிருக்கிற மாதிரி, தன் ஆசைகள், கனவுகள், லட்சியங்கள் உருவே பெருத சிந்தனைகளையே அவ்வப்போதைய தெய்வங்களாக வழிபட்டவர் சோமு முதலியார். நிலையான, என்றைக்குமான ஒரு தெய்வம் எது என்று அவரால் நிதானிக்க முடியவில்லை. ஏன், இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையும் இல்லை அவருக்கு. அவருக்கு மட்டும் என்ன, இன்றய எந்த மனிதனுக்கும்தான்.

3

பொருளைப் பற்றி பேசிய பிறகு இந்த பொருள் எப்படி நாவலாக ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது என்பது பார்க்கவேண்டியது. ஒவ்வொரு கலைஞனும் தனிச் சிறப்பான சுவை கொண்டவன்; சுவை ஊட்டுபவன். இந்த சுவை ஊட்டுவது, பொருள், அது சம்பந்தப்பட்ட அர்த்தம், மதிப்பு (value) இவைகளை ஆசிரியர் கொடுப்பது அது சம்பந்தப்பட்ட உருவம், அழகு, உத்திகளால் ஒழுங்குபடுத்துவது மூலம், இலக்கிய உருவங்களுக்கு மதிப்பு பொருளால் மட்டும் கிடைத்துவிடாது. அமைப்பால்தான் முதன்மையாக கிடைத்தாக வேண்டும். அமைப்புதான் ஒரு இலக்கிய உருவத்தை இனம் காணச் செய்கிறது; தரம் பிரிக்கவும் சாத்யமாக்குகிறது. மேலே சொன்ன பொருளைக் கொண்ட எழுத்து நாவலாக இல்லாமல் ஒரு வாழ்க்கை வரலாருக இருக்கலாம், இலக்கியத் தரமாக இல்லாமலும் இருக்கலாம். ஆசிரியர் தத்துவம் பேசிவிட்டுப் போய்விடலாம். நாவலாகவும் இலக்கியத் தரமானதாகவும் இருக்க வேண்டுமே.

இந்த நாவலை உருவாக்குவதில் க. நா. சுப்ரமண்யம் மரபான கதை சொல்லும் வழியைத்தான் கடைப்பிடித்திருக்கிருர். அவருக்கு முந்தின நாவலாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்களான ராஜம் அய்யர், மாதவையாபோல் ஒரு நிகழ் நிலை (situation)யை எடுத்துக்கொண்டு அதிலிருந்து கதைக்களம் அமைத்ததுபோல் செய்யாமல் வேதநாயகம் பிள்ளை மாதிரி பூர்வோத்திரத்தில் ஆரம்பிக்கிருர். வேதநாயகம் பிள்ளை தன் நாவலை 'நான்' என்கிற சுயசரிதபாணியில் அமைக்க, க நா. சு. 'அவன்' என்கிற சரித்திர பாணியில் அமைத்திருக்கிருர். இன்னும் சொல்லப் போனுல் க. நா. சு. காவியகர்த்தாக்களான கம்பன் பாணியில் ஆரம்பித்திருக்கிருர் என்றுகூட சொல்லத் தோன்றுகிறது. ஸ்தலபுராணம், அவதாரம் என்ற பூர்வோத்திர ஆரம்பமாக கதை ஆரம்பிக்கிருர், பழய காவியங்களின் ஆரம்பம் போல். மேட்டுத் தெரு, அவதாரம், சாத்தனுர் எல்லைகள், காவேரிக் கரையிலிருந்து, போன்ற அத்யாயங்களுடன் ஆரம்பமாகி ஊர்வளம், வர்ணனை, மக்கள் வாழ்வு, குடும்பம், வம்சம், நதி மகிமை, இதெல்லாம் விவரமாகச் சொல்லி, கதாநாயகன் வளர் பருவங்களையும் காட்டி, அவன் பால்ய லீலைகளையும் வர்ணித்து சோமுவை உருவாக்குகிருர் இந்த இடத்தில் நான் ஒன்று சொல்லவேண்டும். மற்ற நாவல்களில் இடம், ஊர்ப்போக்கு, தெரு வாழ்வு, ஊர் அமைப்பு, இயற்கை வளம், மக்கள்நிலை இதெல்லாம் ஒரு பகைப்புலம் ஏற்படுத்துவதற்கான அளவுக்கு, (Setting,தேவைக்கு வேண்டிய அளவுதான் கையாளப்பட்டிருக்கும். 'பொய்த்தேவு' நாவலில் ஊரும் சரி, தெருவும் சரி, நதியின் ஓட்டமும் சரி, ஊர் எல்லைகளும் சரி, தெரு மனிதர்களும் சரி, ஊர் மக்களும் சரி சித்தரிக்கப்பட்ட விதம் சோமு அந்த மண்ணுக்கு உரியவன் என்கிறதை நாம் உணர வைக்க. அவைதான் சோமுவை உருவாக்கி இருக்கின்றன, ஆக்கிக் கொண்டிருக்கின்றன என்று படவைக்க, தக்கபடி வர்ணிக்கப்பட்டு வெறும் ஸ்தூலத் தகவல்களாக இல்லாமல் குணம் கொண்டவைகளாக, சோமுவை பாதிக்கிற அம்சங்களாக அவைகளைப் பார்க்கிருேம். அவர் சாத்தனுர் காவேரி ஆற்றின் ஒரு முழு வருஷத்திய போக்கையும் பல தோற்றங்களையும் வர்ணித்திருப்பதை படிக்கிறபோது, அது சோமுவின் முழு வாழ்வுப் போக்கையே, சுட்டிக்காட்டும் குறியீடாகப் படுகிறது. சோமுவின் வாழ்வு விநாடிகள் போலத்தான் காவேரி வாழ்வின் விநாடிகளும் அவ்வப்போது புதுசு புதுசாக மேடு பள்ளங்களோடு முடிவு நோக்கி ஓடிக்கொண்டிருப்பதாக உணர்வு ஏற்படுகிறது.

ராமாயணத்துக்கு ராமன் ஒருவன்தான்; சிலப்பதிகாரத்துக்கு கண்ணகி ஒருவள்தான் என்று கொள்வோமானுல், பொய்த்தேவுக்கு சோமசுந்தர முதலியார் ஒருவர்தான். முன் இரண்டிலுமாவது வேறு ஒன்றிருவரை சுட்டிக் காட்ட முடியுமோ என்னவோ,சோமுவைத் தவிர வேறு யாருமில்லை 'பொய்த்தேவு'வில். எனவே சோமுவை, சோமசுந்தர முதலியாரை, வேர் இல்லாத மரம் தழைத்து கிளைத்துப்போவதையே பின் அது உலர்ந்து பட்டமரமாவதையே உருவாக்குவதையே தன் ஒரே குறிக்கோளாகக் கொண்ட ஆசிரியர் அதுக்குவேண்டிய தகவல்களை வேண்டிய விதமாக நுட்பமாக பொறுக்கி எடுத்து கதை உருவாக்குவதில் மிக ஜாக்கிரதையாக கையாண்டு வெற்றி பெற்றிருப்பது குறிப்பிட்ட மற்ற சில நாவலாசிரியர்களுக்கு கிட்டாத வெற்றி.

நாவலின் சொல்வழியும் மரபான கதை சொல்வழியாக மூன்றும் மனிதப் பார்வையாகவே கதை சொல்லி (narrator) போக்கிலே அமைந்திருக்கிறது. க. நா. சு. 'அவன்' வழியைப் பின்பற்றினுலும் நாவலை படித்து முடித்ததும் சோமு-

முதலியார் என்கிற 'நான்' பார்வையை உணர முடிகிறது. ஆசிரிய வாக்கு சோமு நினைப்பை தொடர்ந்து போவதாகவே இருக்கிறது. ஆசிரியர் நிகழ்ச்சிகளைவிட சிந்தனைகளை வைத்தே கதையை பின்பற்றுவதால் இது சிறப்பாக சாத்யமாகி இருக்கிறது. இந்தவிதமான வழி கையாளலால் நாவலில் சம்பாஷணைகளே மிகக் குறைவு. சோமு என்கிற சோமசுந்தர முதலியார் என்கிற சோமுப் பண்டாரம் மொத்தம் இந்த நாவல் முழுக்க வாய்விட்டுப் பேசியது எவ்வளவு என்று பார்க்கப்போனால். அவர் குரலை நான் கேட்ட தாகவே படவில்லை நாவலை படித்து முடிக்கிற போது. அவ்வளவு குறைவான பேச்சு. அவர் உருவம் தெரிகிறது, அவர் நினைப்புத் தெரி கிறது, ஏன் அவர் வாழ்வே தெரிகிறது. இருந் தும் குறைந்தபட்சம் பேசி அதிகபட்சம் ஒரு பெர் ஸனலிட்டியாக உருவாகி இருக்கிறார். வேறு எந்த தமிழ் நாவலிலும் இவ்வளவு குறைந்த பேச்சை நான் படித்ததில்லை இதுவரையில்.

இந்த நாவல் அமைப்பு முறையில் இன்னொரு புதுமையும்கூட. 'எபிஸோட்' என்கிறோமே கதைக்கான சிறு சிறு நிகழ்ச்சிகள் அங்கங்கே நிலைக் களன் ஏற்படுத்தப்பட்டு கதைவளர உதவும் காட்சி சித்தரிப்பு, ஒரு இடத்தில், அதாவது சிறு வன் சோமு கொள்ளையரைப் பிடித்துக்கொடுத்த சமயம் தவிர வேறு எங்கும் கையாளப்படவில்லை. அனக்டோட் என்கிறோமே கதா சம்பவங்கள் ஆசிரியரால் கூறப்பட்டு கதை ஏற்றலுக்கு சோமு—சோமு முதலியாரை உருவாக்குவதற்கு பயன்படுவதற்குமேல் காட்சி எழுப்பப்படவில்லை. இந்த நாவலில் வரும் தகவல்களை, அதாவது ஐம் பது அறுபது வயதுக் கால வாழ்நாள் சம்பவங்களை (இந்த நாவலில் கண்டுள்ள தகவலின்படி) எபி ஸோடிகலாக எழுதினால் ஆயிரக்கணக்கானபக்கங் கள் தேவைப்படும். சோமு பண்டாரம் சொன்ன மாதிரி விநாடிகளுக்கு முக்யத்வம் கொடுத்துவிட் டால் இந்த நாவல் முன் பாரதமே சின்னதாகி விடும். எனவே ஆசிரியர் நூதனமான, சிறந்த உத்தி மூலம், கதா சம்பவ நிகழ்ச்சித் தொடர் தகவலை நமக்கு கொடுக்க வழிகடைப்பிடித்திருக் கிறார். சோமுவின் பிறப்பு முதல் பதினேறு வயது வரை சோமுவின் வளர் கதையை விவரமாக சொல்லி வந்தவர் 157ம் பக்கத்தில் 'இடைவேளை' என்ற ஒரு பகுதி ஏற்படுத்தி சோமுவின் முப்பது வருஷ வாழ்க்கையை 25 பக்கங்களில் கடந்துவிடு கிறார். அதாவது சோமு ரங்காராவ் வீட்டில் வேலைக்கு சேர்ந்தது முதல் நாற்பத்தியோராவது வயதில் மளிகைக்கடை சோமசுந்தர முதலியா ராக, ஊர்ப்பிரமுகராக ஆகும் வரையில் உள்ள ஒரு காலகட்டம் :காலப் வேகத்தில் கடக்கப்படு கிறது. எந்த கதைப் போக்கிலும் கால இடை வெளி விட்டுத்தான் கதை நிகழ்ச்சி தொடரும். 'இரவு தூங்கப் போனான்' என்று முடித்துவிட்டு 'மறுநாள் எழுந்ததும் ..' என்ற ஆரம்பத்திலும் இந்த இடைவெளி இருக்கத்தானே செய்கிறது. எனவே கால அளவை இடைவெளி அவகாசத்தை வைத்து கதை நிகழ்ச்சி இல்லை. அறுந்த விநாடி களுக்கு இடையேயும் அறுத பொருளின், கருத்துப் போக்கின் தன்மையை கொடுத்து, விட்டுத் தெரியாதிருக்கச் செய்து கதையின் ஒருமைப் பாட்டை சாதித்துக் காட்டுவதில்தான் கலைஞன் திறமை இருக்கிறது. நாவலில் இரண்டு கட்டங் களில் இந்த இடைவெளி உத்தியைக் கொண்டு மிக அதிகமான இடைவெளி இருந்தும் கதாநாயக னின் வாழ்வோட்டத்திலே இடைவெளி இருப்ப தாக நமக்கு படாமல் செய்து, இடைவெளியிடை யேயும் விநாடிக்கு விநாடி நாம் கதாநாயகனை தொடர்ந்தே வந்திருப்பதாக நமக்குப் பிரமை எழச் செய்யும் மாயத்தை விளைவித்திருக்கிறார். சிந் தனையும், குறிப்புரையும். தகவலுமாக இழைந்து, கலப்படமாக இல்லாமல் கலவையாக சித்தரித் திருப்பது ஒரு நல்ல சாதனை. நாவலுக்கு அதன் உருவத்துக்கு ஒரு நிறைவும் முழுமையும் தொனி ஏற்றி இருக்கிறது இந்த உத்தி.

4

இந்த நாவலின் பொருளை ஒழுங்குபடுத்து வதில் க. நா சு., உணர்ச்சி அறிவு சமபந்தமாக காட்டி இருக்கும் நோக்கு பற்றியும் கொஞ்சம் சொல்லவேண்டி இருக்கிறது. ஒரு நாவலுக்கு பிளாட் என்பது வெறும் கதை மட்டும் இல்லை. கதை நிகழ்ச்சிகளை ஒரு விசேஷ பயன் விளைவிக் கும்படியாக ஒழுங்குபட அமைத்தலும் தேவை யானது. அதுமட்டுமில்லை, பலவித காரணங்கள் மனவெழுச்சிகள் மதிப்புகள் இவைகளால் கிளர்த் தப்பட்ட உணர்ச்சிகளையும் ஒழுங்குபடுத்துதலும் சேரும். இந்த உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல் ஒரு படைப்பாளி வெகு ஜாக்ரதையாக செய்ய வேண்டிய காரியம். சென்டிமெண்டாலிடி தொனி விழச்செய்து விடக்கூடாது. எமோஷனு லிஸம் வழியச் செய்துவிடக்கூடாது. அதே சம யம் போதிய உணர்ச்சி வெளியீடு ஏறாமல் சப்பை யாகவும் போய்விடவும் கூடாது. 'Catharsis' என் கிற அரிஸ்டாடில் இலக்கியத்தத்துவம் நமக்குத் தெரியும். உணர்ச்சியை சுத்தப்படுத்திக் கொடுக்க வேண்டும் படைப்பாளி. க நா. சுப்ரமண்யம், படைப்புக்கு உணர்ச்சி மூலப்பொருள்களில்ஒன்று, அதுக்கு உரிய இடம் உண்டு என்பதை ஒப்புக் கொள்பவர்தான். அவரது 'பொய்த்தேவு' கதா நாயகன் உணர்ச்சியால் ஆனவன்தான். ஆனால் க. நா சு. 'எமோஷனல் ஸ்டாஸிஸ்' என்பதில் நம் பிக்கை கொண்டவர். உணர்ச்சி படைப்பிலே தராசு முனையில் நிறுக்கப்படவேண்டிய பொருள்; மயிரிழை பிச்சினாலும் சென்டிமெண்டாலிட்டியில் கொண்டு முடிகிறது. இது கலைப் படைப்பின் தன் மையை பாழடித்து விடுகிறது. மேலும் உணர்ச்சி நெறி ஏறிய நிலையில் ஒரு பொருளின் உண்மை அர்த்தம் வெளித் தெரிவதில்லை. அங்கே அறிவு செயல்படாமல் ஸ்தம்பித்துவிடுகிறது. ஆகவே உணர்ச்சி சமனப்பட்டுவிட்ட பிறகுதான் தெளி வான சிந்தனைக்கு இடம் ஏற்படுகிறது. ஆகவே அறிவுப் பார்வையாக படைப்பை உருவாக்குவ திலேதான் படைப்பு சிலாக்யமான அர்த்த முக் யத்வம் பெறுகிறது என்று கருதுபவர். எனவே

எங்கே சோமு முதலியார் செண்டிமெண்டல் மனிதனுக மாறிவிடப் போகிறுனே, தன் எழுத்து செண்டிமெண்டலாக ஆகிவிடப் போகிறதோ, என்ற முன் எச்சரிக்கையில் அவர் மற்ற நாவலாசிரியர்களைப் போல உணர்ச்சி பூர்வ மான நிலையிலிருந்து படைப்புப் பார்வை கொள் வதைவிட்டு அறிவு பூர்வமான நிலை எடுத்துக் கொண்டு நாவல் பொருளை முறைப்படுத்தி இருக் கிறுர்.

பணம், பெண் ஆகிய இரண்டு பாதிப்புகள் முதலியாரை ஆட்டிவந்திருக்கிற நிலைமையில் நாவல் பூராவிலும் ஒரு இடத்திலும் உணர்ச்சி நிலை தொனிக்கும் ஒரு கட்டத்தைப் பார்க்க முடியவில்லை. நிலை வர்ணிக்கப்படவும் இல்லை. 'கன்னிகழியாத பருவ' சோமுவுக்கு பால் உணர்ச்சி தோன்றிய கட்டத்தில்கூட மன நிலையோ, உறவுக் காட்சியோ எழவில்லை என்ருல்? அவர்கள் சந்திப்பை தன் குறிப்புரை ஆக சில வரி களில் கூறி நகர்ந்துவிடுகிறுர். மேட்டுத் தெரு. காவேரிக்கரை போன்ற இட வர்ணனைகளை நல்ல கற்பனையுடன் பக்கக் கணக்கில் அழகாக வர்ணிக் கத்தெரிந்த க.நா.சு ஒரு பாராகூட மனநிலை வர்ண னைக்கு முற்படவில்லை. காரணம் அவருக்கு உணர்ச்சி மனநிலை வெளியீடு முக்கியம் இல்லை. அதன் பாதிப்புதான் முக்கியம். ஆரம்பம் முதல் நாவல் நெடுக, நிகழ்ச்சிகள், உறவுகள், ஆசைகள், ஏக்கங்கள், லட்சியங்கள், மோதல்கள், சந்தர்ப் பங்கள், வாய்ப்புகள், இவைகளின் விளைவாக சோமு முதலியார் எப்படி பாதிக்கப்பட்டு செயல் படுகிறுர் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு, சோமு வளர்வதை வாழ்வதை நம் முன் நடத்திக் கொண்டு செல்கிறுர். சோமுவை எந்த உணர்ச்சி நிலையிலும், நிற்கிற ஒரு உணர்ச்சி புருஷனுக பார்க்க முடிவதில்லை. உணர்ச்சி நிலையில் நின்று ஒரு போராட்டத்துக்குப் பின் அப்போதைக்கு ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்து செயல்படுகிற நிதான புருஷனுகத்தான் பார்க்கிறேம். சோமு முதலியாரின் மனம் முதலில் தெரிந்து அவர் செய லைப் பின் தொடரவில்லை நாம். சோமுவின் செயலை முதலில் தெரிந்து மனதைப் பின் நோக் கித் துளாவி அறிந்துகொள்கிறேம்.

இதை ஒட்டி இன்னெரு விஷயம். உணர்ச் சியைவிட அறிவுக்கு, மன எழுச்சியை விட சிந் தனைக்குத்தான் மனிதன் குணப்பண்பில் இடம் இருக்கவேண்டும் என்கிற ஒரு அடிப்படைத் தத்து வத்தை கொண்டவர் க. நா. சு. அவரே சொல்லி இருக்கிறுர்: 'அடிப்படையான சில வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துச் சொல்ல இன்றைய மனித னை சோமுவின், வாழ்க்கை எனக்குப் பெரிதும் உதவிற்று' என்று. எனவேதான் ஒரு 'இன்ட லக்சுவல்' நிலை எடுத்துக்கொண்டு படைப்பையும் பார்க்க அவருக்குத் தோன்றியிருக்கிறது. முழு நாவலையும் சிந்தனைகளாகவே மாற்றி அமைத் திருப்பதைப் பார்க்கிறேம்; க. நா. சு.வின் சிந் தனைகளை பார்க்கிறேம், சோமு முதலியாரை கைப்பாவையாக வைத்து. இடைவேளை உத்தி இந்த சிந்தனைப் போக்கு வழி கதை நகர்த்தலை இன்னும் தீவிரப்படுத்துவதுக்குத் தான் பயன் படுத்தப்பட்டிருக்கிறது.

சோமு சோமு முதலியார் ஆகி சோமுப் பண் டாரமாக ஒய்கிறபோது தன் ஐந்தாவது வயதிலே இருந்து தனக்குள் விநாடிக்கு விநாடி சிந்தித்து சிந்தித்து ஓய்ந்த சிந்தனையாளனது வாழ்க்கை முடிவை பார்க்கிறேம். பண்டாரத்திடம் அவர் சொன்ன முத்தாய்ப்பான கருத்துக்கு இந்த ஐம் பதுக்கு மேற்பட்ட வருஷத்து சிந்தனை யோட்டம்

இரண்டு கவிதைகள்

ஈரம்

எஸ். வைதீஸ்வரன்

நானும் ஒரு பாரி,
நாகரீகப் பாரி—

மானும், மயிலும், மல்லிகைக் கொடியும்,
தேரும், புரவியும், திருவும் ஆக்கவில்லை,
நானும் ஒரு பாரி.

காற்று தொலைந்து, கனல் திருகும் வேளை,
மூச்சு திணறி, மூக்குப் புனலாகக்
காற்றே..... காற்றே யென்று
கைகளை நீட்டினேன்.. மின்விசிறி யோட்ட.
அண்ணாந்த
கண்கள் நிறுத்தியது வெடுக்கென்று.

எட்டாத ஒட்டருகில்
வேரின்றிப் படர்ந்த கொடி;
எம்சிறகில் தூளிகட்டிப்
படபடத்தது சிலந்திப்பூச்சி.

ரத்தத்தை எச்சிலாக்கி,
எச்சிலை எழிலாக்கி,
இரைக்கேங்கும் மெல்லியலைப்
பாழாக்க மறுத்தது மனம்.
புழுக்கம் மெய்விதிர்க்க,
மல்சட்சை மழையாக
இரக்கம், இரக்கம் என்று
இதயத்தில் நனைந்து நின்றேன்
நானும் ஒரு பாரி!
ஏன்? ....

கருப்பு வீதி

பகல்கள் இருண்டால்
முகில்கள் கொட்டும்.
இரவோ, கறுத்தால்
நிலவின் குற்றம்.

விளக்கில் சிரித்த
வீதிகள் தேம்பினுல்
யார் செய்த குற்றம்?— வெறிப்
போர் பெற்றதோ, பூதம்?

தானே ஆதாரம். அவர் தனக்கு சிந்திக்க அவகாசமே இருக்கக்கூடாது என்று ஒன்றன் பின் ஒன்ருக அவர் புதுப்புது முயற்சிகளில் ஈடுபட்டிருக்கலாம். பணம் பண்ணுகிற வேகத்திலே மற்றதையெல்லாம் மறக்க ஆசைப்பட்டிருக்கலாம். ஆனுல் அது வெற்றிபெறவில்லே. வெற்றி பெறவும் முடியாது. பணம் பண்ணுகிற வேகம் அவருக்கு ஏற்பட்டதே அவர் சிந்தித்ததின் விளைவு தானே, அவர் எதை எல்லாமோ மறக்க ஆசைப்பட்டதே எத்தனையோவிதமான சிந்தனைகள் செய்து குழம்பின நிலேயில்தானே. 'இருபத்தி நான்குமணி நேரமும் அவருக்கு தன்னைப் பற்றிய நினைவேதான். ஒரு நிமிஷம் கூட சிந்தனையில் அவருடன் போட்டியிட ஆள் கிடையாது' என்று நாவலில் வருகிறபடி, சிந்தித்து சிந்தித்து ஒய்ந்த மனிதன் தான் சோமு முதலியார். ஆனுல் சிந்தனைப் போக்கிலே ஒரு குறை. அவருக்கு தன் சித்தனைப் போக்கை விநாடிக்கு விநாடிக்கு மாற்றிக்கொள்ளவும் அதுக்கு ஏற்ப செயல்படவும் முடிந்தது. ஆனுல் தான் ஏன், எதற்காக இதை செய்கிறேம் என்பது மட்டும் தெளிவாக ஒரு நாளும் இருந்ததில்லே காட்டு வெள்ளத்திலே அலேக்கப்பட்ட போக்கான சிந்தனையே தவிர, அணைக்கட்டுகளால் தேக்கிக் கட்டுக்குட்பட்டு வரும் வாய்க்கால் நீரோட்டப் போக்கான சிந்தனையாக இல்லே.

அவரது சிந்தனைப் போக்கிலே அடிப்படையான கோளாறு அதிலே தார்மீக அடிப்படை இல்லாததுதான். மேட்டுத் தெருக்காரனை அவருக்கு அது ரத்தத்தில் மரமாக ஓடவில்லே. தார்மீக அடிப்படை இருந்துவிட்டால் மட்டும் மனிதன் நேர்மையாக சிந்திக்கிருனு என்று கேட்கத் தோன்றும். அதுவும் நடப்பதில்லே தான். இருந்தாலும் அது கொஞ்சம் முறைப்படுத்தி இருக்கும் ஒரு அளவுக்கு சோமசுந்தர முதலியார் விஷயத்தில் இன்னெரு காரணமும் சொல்லலாம் கோளாறுக்கு சந்தர்ப்பத்தால், வாய்ப்பால் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அவருக்கு. அப்படி சிந்திக்க ஏற்பட்டபோது அடிப்படை மதிப்புகள் சம்பந்தமாக அஸ்திவாரம் இல்லாத நிலேயில்தன் சிறு வயது வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்கள் தன்னை பாதித்தவைகளே. பாதித்த விதத்தை கொண்டு அவை சம்பந்தப்பட்ட மதிப்புகளே மெய் என முடிவுகட்டி அதன் வழியிலேயே, பலத்திலேயே வாழ்க்கையை நிறைவானதாக, திருப்திகரமானதாக ஆக்கிக்கொள்ள முனைந்து எதைத் தின்ருல் 'பித்தம் தெளியும்' என்ற ஆசையாக, லட்சியமாக அவ்வப்போது எதிர்ப்படுகிற விநாடிக்கு விநாடி வாய்ப்புகளே எல்லாம் யோசியாமல் பயன்படுத்தி முன்னேறுகிருர். அத்தகைய முன்னேற்றம் அர்த்தமற்றது, நிறைவானது இல்லே என்பது முடிவில்தான் படுகிறது. இது புரியாமல், தான் செய்கிற காரியங்களுக்கும் காரணம் புரியாமல் சிந்தித்தும், செயல்பட்டும் வந்த புரிந்து சிந்திக்க முடியாத ஒருவரை நாம் புரிந்துகொள்ளும்படியாக நேர்த்தியாக சித்தரித்து அமைப்பான நாவல் எழுதப்பட்டிருப்பது நல்ல எழுத்துக்கு உதாரணம்.

5

இனி வாழ்க்கைக்கு இது நேர்மையான யதார்த்த உறவு கொண்டிருப்பதை பார்க்கலாம். கலேக்கும் வாழ்க்கைக்கும் உள்ள உறவுபற்றி பொனுமி டொப்ரி எழுதியுள்ள சில வாக்கியங்கள் என் வழிக்கு அனுசரணையாக இருப்பவை. அவர் சொல்கிருர்.

''ஒரு கலேப் படைப்பு, ஒரு ஒழுங்கில்லாமல் எழுதப்படுகிற நாவலும் கூட — நடப்பு வாழ்க்கையேதான் என்பதில்லே என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிருர்கள். வாழ்க்கை மாதிரி ஒன்று அது. வாழ்க்கையிலிருந்து அதை வேருனதாக காட்டுவது அதனுடைய அமைப்பு மோஸ்தர்தான் (பாட்டர்ண்', 'வாழ்க்கை அதுமாதிரி இருக்கு 'அல்லது' மனிதர்கள் அது மாதிரி இருக்கிருர்கள்' என்று சொல்லத் தோன்றுகிற அளவுக்கு சங்கேதத்திஞல் தெரிவிக்கிற வழியாகத்தான் இந்த மோஸ்தர் குறி காட்டுகிறது. ஒரு நல்ல படைப்பு வாழ்க்கையிலிருந்து வெட்டுப்பட்டு இருப்பது. அதில் வரும் பாத்திரங்கள் நமது காலத்தில் வாழவில்லே. தங்களுக்கே உரிய ஒரு காலத்தில் வாழ்கிருர்கள். நம்மதைவிட அவர்களுக்கு இட விஸ்தாரமும் குறைவு. அவர்கள் ஸ்தூலமாக தோன்றிஞலும் கூட ஏதோ காற்றுருபமான தொட முடியாதவர்களாகவே அவர்கள் இருப்பதாகப் படுகிறது நமக்கு.'

முழுக்க இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பொய்த்தேவு நாவலுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள யதார்த்த உறவு இந்த அடிப்படையில்தான் இருக்கமுடியும். கதையும் சரி, கதாபாத்திரமும் சரி குறியீடுகள்தானே. சோமு முதலியார் ஒரு குறியீடு' பொய்த்தேவு குறிப்புணர்த்தும் நாவல். ''சோமு முதலியார் மாதிரி இருப்பவர்கள்', 'பொய்த்தேவு'வில் நடப்பது மாதிரி நடந்தது என்ற அளவுக்குத்தான் வாழ்க்கைக்கு உண்மையானதுபற்றி சுட்டிக்காட்ட முடியும். சச்ருபம் சோமு முதலியாரையோ பொய்த்தேவு நாவல் சம்பவத் தொடரையோ அப்படியே வாழ்க்கையில் பார்க்கமுடியாது. சம்பவிக்கக்கூடிய தன்மை, இயலும் தன்மை இந்த இரண்டையும் கொண்டு ஒரு கலேப்படைப்பை வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கமுடியும். அந்த பொருத்தத்திஞலே ஏகதேச ஒற்றுமையோ, அதே போன்ற தோற்றமோ காணமுடிகிற அளவுக்குத்தான் உறவு வாழ்க்கைக்கும் கலேக்கும்.

க. நா. சு. வே. சொல்கிருர்: 'சோமு முதலியாரைப்போன்றவர்களே தங்கள் தெய்வங்களாக உள்ளவர்களும் நம்மிடையே இல்லாமல் இல்லே' என்று சோமு முதலியார் ஒரு தெய்வம், அவரைப் போன்ரேரை, தெய்வங்களாக வழிபடுபவர்கள் என்று பிரித்திருப்பதிலிருந்து சோமு முதலியாரை அவர் பக்தர்களேவிட பெரியவராக ஒரு குறியீடாக கருதி இருக்கிருர் ஆசிரியர். இந்த அள

வுக்கு பொய்த்தேவு வாழ்க்கையின் உண்மை நிலைக்கு பொருந்த அதுக்கு இனிய, ஒட்டி உள்ள ஒரு நிலவரத்தை அடக்கி இருப்பதாகச் சொல்ல லாம். சோமு முதலியாரின் செய்கைளும் நினைப்பு களும் வெகு யதார்த்தமாக சித்தரிக்கப்பட்டு அதோ 'சோமு முதலியார் என்று இனம் கான முடிகிற அளவுக்கு ஒரு முழுமையான யதார்த்த தொனி நாவலில் ஏறி இருக்கிறது. இவ்வளவு மனித வாழ்க்கைக்கு உள்ளடங்கின, பிசிர்விடாத சகஜத்தன்மையான குணங்களை இயல்பாகப்பட சித்திரிக்கிற நாவல்கள் தமிழில் விரல்விட்டு எண் ணக் கூடியவைகள்தான். அந்த சிலதிலும் இது சிறந்த ஸ்தானம் வகிக்கிறது.

6

இந்த நாவல் நமது மரபுக்கு வளம் ஏற்றுகிற நாவலும்கூட. மேல்நாட்டு செல்வாக்கால் நமது சிந்தனைப் போக்கு திசை திருப்பப்பட்டு, தற் கால உலக நிலை பாதிப்பால் அதுவும் குழப்பப் பட்டு பழைய ஆணிவேர் மதிப்புகள் கலகலத்து விட்ட நிலை; புதிய மதிப்புகள் எதுவும் பால் பிடிக் காத பயிர்நிலை. பிற மனித வாழ்வு உணர்வுகளை, அவரவர் சூழ்நிலை பாதிப்பு சிந்தனைகளை எல்லாம் நாம் படித்துவிட்டு, நமது வாழ்விலே அத்தகைய அநுபவம் ஏற்படாத நிலையில், வாய்ப்பும் இல் லாத நிலையில் நமது சிந்தனைகளை மேலே சொன்ன வர்களது வழியிலே தொடரவிட்டுக்கொண்டு, இலக்கியத்திலும் அந்தவிதமான சிந்தனைகளுக்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கிற இந்த நாட் களில் 'பொய்த்தேவு' ஒரு எச்சரிக்கையாக இருக் கிறது நமக்கு. சோமு முதலியார் ஒரு எக்ஸி டென்ஷியலிஸ்ட்டோ என்று கொஞ்சம் யோசித் துப் பார்த்தேன். இல்லை. எக்ஸிஸ்டென்ஷியலிஸ்ட் என்பவன், மரபானதும் உலகப் பொதுவானது மான அடிப்படை மதிப்புகளை எல்லாம் மறுத்து ஒவ்வொரு கணமும் தன்படியே வாழ்ந்து மனிதன் தனக்கென மதிப்புகளை தானே உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதுபவன்.

சோமு முதலியார் அப்படி அடிப்படைகளை தெரிந்து பழைய மதிப்புகளை மறுத்து, புது மதிப்பு களை ஏற்றுக் கொண்டவர் இல்லை. அவர் பொய் மதிப்புகளை மதித்துக் கொண்டாரே தவிர தான் விரும்பும் நேரான வாழ்வுக்கான வழி என்று தீர்க்கமாக சிந்தித்து சத்தான மதிப்புகளை கொள்ளவில்லையே. தன் செய்கை மூலமும் காட் டிக் கொள்ளவில்லையே மதிப்புகள் உண்டு என்ப தையே அறியாதவர் அவர் என்றே சொல்லலாம். வாய்ப்பால் எது முதலில் பட்டதோ அதுதான் சரி என்று ஏற்றுக்கொண்டுவிட்டார், ஒப்பிட்டுப் பார்த்து இல்லை. வெறும் லோகயதவாதி அவர், நான் ஏற்கெனவே சொன்னதுபோல. லோகாய தத்தின் வீழ்ச்சியை,ஆன்மீக மதிப்பை வலியுறுத்து கிறது 'பொய்த்தேவு'. நாவலில் இடைவேளையில் வருகிறது :

'வாழ்க்கையிலே சிந்திக்க வேண்டியவற்றை எல்லாம் சிந்தித்து, கூடுமான வரையில் முடிவு கட்டிவிட்டு பிறகு வாழ ஆரம்பிப்பவனே கெட் டிக்காரன். பழைய காலத்து குருகுல வாழ்க்கைக்கு இதுதான் அர்த்தம் போலும். வாழ்க்கை வழிகள் குருகுலத்தைவிட்டு வெளியேறுமுன் இடமாகிவிட வேண்டும். இந்த வழி போகலாமா, அந்த வழி போகலாமா என்று வழிநெடுகிலும் யோசித்துக் கொண்டே போகிறவன் எங்குமே போய்ச் சேர மாட்டான் என்பது நிச்சயம்.'

சோமு முதலியாருக்கு சிறுவயதில், குருகுல வாசம் கிட்டாதது இருக்கட்டும், வாழ்வே உரு வாகவில்லையே. தானாக தட்டுத் தடுமாறி இது தான் வாழ்க்கை போலிருக்கிறது என்று மற்றவர் களின் வெளித் தோற்றத்தை வைத்து முடிவு கட்டி, தான் போகிற திசையைப் பற்றிய நிச்சயம் இல்லாமல் விநாடி விநாடியாக வழி மாறி வாழ்ந்து எதிர்பாராத அதிர்ச்சியில் முடிந்த வாழ் வைத்தானே பார்க்கிறோம் அவரிடம். பொய்த் தேவு நமது ஆன்மீக அடிப்படைகளை வலியுறுத்தி நமது தத்துவ மரபுக்கு வளம் ஏற்றுகிற நாவல்.

7

எனக்குத் தெரிந்தவரை இது சுயமான நாவல். உத்திவகையில், எழுதுகிற முறையில் மேல்நாட்டு செல்வாக்கும் இதில் காணமுடிய லாம். அதன் விஷயம் உள்ளடக்கம் அர்த்தம் நம் முடையதுதான். அதேபோல தமிழ் நாவல் இலக் கியத்தில் இது சிறந்து நிற்பதுதான். இந்திய நாவல் இலக்கியத்தில் இதன் இடத்தைப்பற்றி எனக்கு நிதானிக்க இயலவில்லை. இந்திய மொழி நாவல்களைப் பற்றி ஓரளவுக்காவது படிக்க வாய்ப்பு நமக்கு கிட்டாதவரையில் முடிவுசொல்ல முடியாது. மொழியைக் கடந்து விரிவான இலக் கியப் பரிச்சயம் நமக்கு ஏற்படும் வாய்ப்புக்கு இன் னும் எவ்வளவு நாளாகுமோ? சர்வதேச நாவல் வரிசையில் வைத்து படி அளக்க நான் முற்பட வில்லை. சாத்யமில்லாத காரியம். நாட்டுக்கு நாடு நாவல் மரபு வேறு. அளவுகோல்களும் வேறாக இருக்கின்றன. பொது அளவுகோல் முடியாது; பொய்த்தேவு இலக்கியத் தரமான தலைசிறந்த தமிழ் நாவல், பல உலக இலக்கிய சிறந்த நாவல் களை படிக்கிறபோது ஏற்படுகிற அநுபவம், திருப்தி கிடைக்கிறது என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வளவுக்கும் பிறகு நான் 'பொய்த் தேவு'வை உங்கள் முன் எடுத்துவைக்கிறேனா என் பது எனக்கு சந்தேகம்தான். இதுக்குமேல் நீங் களே அதைப் படித்துப் பார்த்து உங்கள் முடிவு களை செய்துகொள்வது உங்கள் பொறுப்பு. டி. எஸ். இலியட்டின் வரிகளுடன் முடிக்க விரும்புகிறேன். "ஒரு நூல் இலக்கியத் தரமானதா என்பதை இலக்கிய அளவுகோல்கள் கொண்டு பார்க்க வேண்டும். சிறந்த இலக்கியமா என்பதை மற்ற அளவுகோல்களைக் கொண்டு மதிப்பிடவேண் டும்."

பொய்த்தேவு இந்த இரண்டு பரீட்சைகளி லும் தேரிவிட்ட நாவல்.

கொலைகாரர்கள்

சி. மணி

1. யார்தான் விரும்பவில்லை
புகழை?
வீட்டிலே தெருவிலே ஊரிலே முடிந்தால்
உலகிலே யார்தான் விரும்பவில்லை?
மூவாசைக்கும் மேலாசை இந்தப் புகழாசை;
மூவாசையும் நணவாகும் இந்தப் புகழால்.
அதனால் புகழாசை பிடித்தாட்ட
ஆள் சேர்த்துப் பலவகை கருவி சேர்த்து
படையெடுத்தேன் வீரனானேன் வள்ள
போற்றினர் கவிஞர், [லானேன்.
களத்தில் கிடந்த தலைகள் கைகள்
முண்டங்கள்,
வட்டமிட்டுக் கத்திக் கொத்தும் கழுகுகள்,
தந்தை மகன் கணவன் இழந்தவர்கள்.
போற்றினர்; இன்னும்
என்ன வேண்டும்?

ஃ ஃ ஃ

2. இதுவும் ஒரு மதம்!
இவர்கள் கடவுளும் ஒரு கடவுள்!
சிவன் துணை பூசி
பேச்சிலே வென்றோம்;
நாலாயிரம் பேர்களைக் கழுவேற்றினோம்;
நாலாயிரம் பேர்களைத் தான்.

ஃ ஃ ஃ

3. கள்ளில் போதையில்லை;
சதையெழில் தளும்பித் தளும்பி
வழியும் கன்னியில் போதையில்லை;
கண்முன் தெரியாமல் காற்றாகக்
காரை ஓட்டுவதில்தான் என்னபோதை!
மரம் வீடுவண்டி பாய்ந்தோட
கையை ஹாரனில் அழுத்தி,
கண்ணைப் பாதையில் வைத்து,
பல்லை உதட்டில் தைத்து
60, 70, 80, 85—ஐயோ!
வண்டி நின்றது
மனிதப் பிணம் நிறுத்த.

ஃ ஃ ஃ

4. இதோ பார்,
இது வலதுகை, இது இடதுகை;
இதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?
இருந்தாலும் மிகவும் கொஞ்சந்தான்,
இல்லையா?
உடனே நல்ல நோட்டு என்றுதான்
சொல்வார்கள்.
ஒன்றுக்கு ஐந்து தள்ளிவிடு
பேசாமல் பயன்படாமல் தள்ளிவிடு
யாரும் பிடிக்க முடியாது தள்ளிவிடு
உன்னைக் கண்டுபிடிக்கவே முடியாது.
போ!

ஃ ஃ ஃ

5. உண்மையும் போலியும் ஒன்றுதான்;
வாங்குவது என்னவென்று தெரியாமல்
வாங்கும்போது எல்லாமே ஒன்றுதான்.
கிடைத்தால் போதுமென்று தவிக்கிறார்கள்.
பழியேற்க உண்டு கடவுளும் டாக்டரும்,
நமக்கோ உண்டு லாபம்
ஒன்றுக்கு நூறு, போ,
மருந்தைக் கடைக்கு அனுப்பு.

ஃ ஃ ஃ

6. கு. ப. ரா.வின் 'ஆற்றாமை'யில்
சாவித்ரி தான் செய்தது தவறு
என்று உணர்கிறாள். எப்படித் தவறு?
அப்படித்தான் நானும் செய்தேன்;
இப்போதுதான் எனக்குத் திருப்தி.
என்ன பெண் இந்த சாவித்ரி!

ஃ ஃ ஃ

7. இதுக்கென்ன பெரிய வாதம்?
நான் கொலைக்காரன் தான்,
பல கொலைகளைச் செய்தவன் தான்.
அப்போது, கழுத்தை அறுத்தபோது
வெள்ளரிப்பழத்தை அறுப்பதுபோல்
அறுத்தபோது
நான் கடவுளாக இருந்தேன்.
நான் நினைத்தால் உயிர்
கொடுக்கலாம், போக்கலாம்.
நீங்கள் யாரும் கொலைகாரன் ஆனதில்லை;
அதனால் நீங்கள் யாரும் கடவுள் ஆனதில்லை;
ஆமாம் நான் கொலைகாரன் தான்.

கொல்லிப்பாவை-5

டி. கே. துரைஸ்வாமி

நீ
என் வாழ்வைக்
கனவாக்கி விட்டாய்;
"கனவு
நினைவின் நிழல்";
மனதை வசீகரிக்கும் இதன்
"விருட்"டென்ற நடை கண்டு
என் மனம் மிரள்கிறது;
தேதி 20;
அதற்குள் பை
ஒட்டை;
நினைவு
பியத்துப் பிடுங்குகிறது;
பகல் குற்றுயிராகிக்
கிடக்கும்
அந்திப்
பொழுது;
ஜுர வேகத்தில்
பிரக்ஞை தடுமாறுகிறது;
பிராந்தி கௌவிப் பிடிக்கும் நேரம்
வரும்
மண்டைக் கனம்;
மனம்
அட்டையாகச்
சுற்றிச் சுருண்டு
அசைவற்றுக்
கிடக்கும் முடக்கு வாதம்;
நொண்டிப் பேச்சு;
புலன்கள் மரத்துக்
கட்டையாகப்
போகின்றன;
துயில் சுருட்டும்
கண்கள்;
உள்ளிருக்கும்
இருட்டில்
நிழல் போன்ற
நினைவின் நச்சரிப்பு;
தெருவில் காலிப் பையன்கள்
யாரையோ பார்த்துச் சிரிக்கிறார்கள்;
ஏன்?
யாரைப் பார்த்து?
ஒரு டயரிக் குறிப்பு;
எங்கும்
"வெளிப்பூச்சின்
ஏகாதிபத்தியம்."
பூச்சுக் கலைந்து விட்டால்
சூன்யம் பல்லிளிக்கிறது;
திரும்பிப் பார்க்காத
உன்னைப் பின்பற்றி
வாழ்க்கையைக்
கனவாக்கி விட்டேன்;
நினைவின் ஸ்பர்சம்
சுளீரென்று தைக்கிறது;
நீ
என்னதான்
என் எனக்கு
உள்ள(த்)தைக்
கவர்ந்தாலும்
"உன் தத்ரூபப் பிரதிபலிப்பு
ஆக
அப்பா—அம்மா
சொன்னதைக் கேட்கும்
நல்ல பிள்ளையா என்ன நான்?"
என்ற
விஞ்ஞவின் கொக்கி உருவைக்
கண்டதும்
இந்த நிகழும் நிமிஷங் கூட
தெருவின் காலிப் பையன்கள்
போல்
சீட்டியடித்துச் சிரிக்கிறது;
எல்லாம்
உடைந்த
கண்ணாடிச் சில்லின்
ஒளி வீச்சு.

புராண காலச் சொற்களை பத்திரிகைகளை உபயோகிப்பதா?

நமது சகோதரப் பத்திரிகை 'தேச பக்த'னின் ஆசிரியர் சமீபத்தில் தொண்டை நாட்டுக்குச் சென்றாரென்று அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அட, அடா, இவர் திடீரென்று தொண்டை நாட்டுக்குப் போய்விட்டாரே, முன் கூட்டியே தெரியப்படுத்தி இருந்தால் வயிற்று நாடு, இடுப்புநாடு முதலிய நாட்டிலுள்ளவர்களுக்கு எழுதி இவரை வரவேற்கச் சொல்லலாமே என்று நினைத்தேன். ஆனால் நல்ல வேளையாய் எனது நண்பர் ஒருவர் தொண்டை மண்டலம் நமது மாகாணத்திலேயே ஒரு பிரதேசத்தைக் குறிப்பிடுகிறது என்றார். ஆனால் இன்ன பிரதேசமென்று அந் நண்பரால் கூட சொல்ல முடியவில்லை. இவ்விருபதாவது நூற்றாண்டில் தொண்டை மண்டலம் அறிந்தவர்கள் இல்லவே இல்லை. புராண காலத்து சொற்களை தினசரிப் பத்திரிகையில் உபயோகிப்பது உசிதமா? ஒரு வேளை நமது பழய பெயர்களை மறந்துவிடக் கூடாது என்று அப்பத்திரிகாசிரியர் நினைத்தால் தொண்டை மண்டலம் என்பதற்குப்பின் இரண்டு அடக்கக் குறிகளுக்குள் இக்காலத்தில் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பெயரை எழுதியிருந்தால் நலம்.

—சுப்ரமண்ய சிவா ('நாரதர்')
(இந்திய தேசாந்திரியில் 1919)

எழுத்தும் எழுத்தாளர்களும்

வல்லிக்கண்ணன்

விதம்விதமான அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும்—'ஐடியா'க்களும் போதனைகளும்—அவ்வப்போது வெவ்வேறு நபர்களால் என்னிடம் அறிவிக்கப்படுகின்றன. அவை எல்லாம், முக்கியமாக என்னுடைய நன்மையை நினைவில் கொண்டும், பொதுவாக தமிழ்ப்பத்திரிகைகளின் தன்மையை மனசில் வைத்துமே பேசப்படுகின்றன.

'உங்களுடைய போக்கும் நோக்கும் இந்தக் காலத்துக்கு லாயக்கானவை அல்ல. என் இஷ்டம் போல், எனக்குப் பிடித்ததைத் தான் எழுதுவேன் என்று நீங்கள் நினைப்பது வெற்றிக்கு வழிவகுக்காது. இன்றையப் பத்திரிகைகளுக்குத் தக்கபடி நீங்கள் எழுதினால், உங்கள் திறமைக்கும் உங்களுடைய எழுத்தின் சிறப்புக்கும் இதற்குள் எவ்வளவோ கௌரவமும் கவனிப்பும் கிட்டியிருக்கும்' என்றே எனது நலனில் அக்கறை கொள்ளும் நண்பர்கள் கருதுகிறார்கள்.

'இன்றையப் பத்திரிகைகளுக்கு எப்படிப்பட்ட எழுத்துக்கள் தேவை, தெரியுமா? ஸீரியஸ் லிட்டரேச்சர், தாட் புரொவோக்கிங் என்று சொல்லப்படுகிற கனமான விஷயங்களே தேவையில்லை. மூளைக்கு வேலை கொடுக்கவே கூடாது. சிந்தனைக்கு இடம் வைக்கப்படாது. இன்றையக் காலேஜ் மாணவர்களின் போக்கு போல் தான் பத்திரிகை வாசகர்களின் தன்மையும். காலேஜ் மாணவர்களும் மாணவிகளும் கனமான சாப்பாட்டில் ஆர்வம் காட்டுவது கிடையாது. இடைக்கிடை, நொறுங்கல் தீனி என்று சொல்லுவோமே அதுமாதிரி, ஸ்லைட்ஸ்நாக்ஸ் தின்பதில் தான் அவர்களுக்கு மோகம் அதிகம். இந்தவிதமான கொறிக்கும் மனோபாவம் தான் பத்திரிகை விஷயங்களைப் புரட்டுகிறவர்களிடமும் காணப்படுகிறது அதனால் தான் டிட்பிட்ஸ், அனெக்டோட்ஸ், பாக்ஸஸ். சுவையான துணுக்குகள் வகையராவுக்கு அதிகமான வரவேற்பு இருக்கிறது. நீங்கள் தான் நையாண்டியாகவும், கிண்டலாகவும் எழுதுவீர்களே! அவ்வித எழுத்துக்களுக்கு இன்றையப் பத்திரிகை மார்க்கெட்டில் நல்ல கிராக்கி ஏற்படுத்தலாம்,' இவ்வாறு ஒரு நண்பர் தனது யோசனையை என்னிடம் வெளியிட்டார்.

'இந்தக் காலத்தில் பத்திரிகை நடத்த நாம் கஷ்டப்பட வேண்டியதே இல்லை. பத்துப் பதினைந்து, அல்லது இருபது வருஷங்களுக்கு, முந்தி வெளிவந்த பலவிதமான பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட துணுக்குகளையும், அனெக்டோட்களையும், குட்டிக்கதைகளையும் இப்போது தாராளமாக எடுத்து வெளியிடலாம். வாசகர்களுக்கு மறதி அதிகம் என்பது மட்டுமல்ல; வாசகர்களின் தலைமுறையே பத்து வருஷங்களுக்கு ஒரு தரம் புதிதாக மாறிமாறி வருகிறது. இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு பத்திரிகைகள் படித்துக் கொண்டிருந்த அதே வாசகர்கள் தான் இன்றையப் பத்திரிகைகளை வாசிக்கிறார்கள் என்று எண்ணினால் அது தவறேயாகும். இன்று பத்திரிகை வாசிப்பவர்கள் முற்றிலும் புதியவர்கள். பழைய விஷயங்களையே திரும்ப எடுத்துக் கொடுத்தாலும் இவர்களுக்கு அவை எல்லாம் புது விஷயங்கள் தான் கதைகளில் கூட பெயர் மாற்றம், தலைப்பு மாற்றம், ஒட்டு வெட்டு வேலைகள் செய்து கொடுக்கலாம். ஆகவே, வீக்லி மேகசினாகவே இருக்கட்டுமே. அதை தனி ஒரு நபரே சுவையாகத் தயாரித்து விட முடியும்! இப்படிச் சொன்னார் ஒரு பத்திரிகையின் பொறுப்பை மேற்கொண்டிருந்த ஒருவர்.

'உம்மிடம் திறமை இருக்கலாம். உழைக்கும் மனமும் இருக்கலாம். ஆனால், நமது திறமையை, உழைப்பாற்றலை, மற்றவர்கள் மதித்து நம்மிடம் வரட்டுமே என்று நீர் நினைக்கிறீர். அதனால் இன்றைய நியதிகளை அனுஷ்டிக்காமல் ஒதுங்கியிருக்கிறீர். மற்றவர்கள் உம்மை ஒதுக்கிவிட்டுப் போய் விடுகிறார்கள்' என்று ஓன்றிரண்டு பேர் விமர்சனம் செய்ததும் உண்டு.

எழுத்துத் திறனும் உழைப்பாற்றலும், அனுபவமும் கல்வி அறிவும் இருப்பதுமட்டும் வெற்றி பெற்றுத் தந்துவிடாது. பத்திரிகை உலகத்தில் செயலும் செல்வாக்கும், வசதியும் வாய்ப்பும் பெற்றிருப்பவர்களைக் கண்டு அவர்கள் மனம் மகிழும்படி பேசிப்பழக வேண்டும்; எழுத்துலகப் பெரியவர்களை அடிக்கடி சந்திக்கவேண்டும். புத்தகம் பிரசுரிக்கிறவர்களை சதா அணுகவேண்டும்.

ரோஜாக் குடும்பம்

ரா:பர்ட் :ப்ராஸ்ட்

இன்று ரோஜா மலர் ஒருரோஜா;
இதுவரை என்றும்அது ரோஜாதான்.
ஆனால் தாவரஇயல் கூறும்
ஆப்பிள் ஒருரோஜா என்று.
பேரியும் அப்படியே; ப்ளமும்
அப்படித்தான் போலும்.
யார்அறிவார் இன்னும்எது
ரோஜா ஆகுமென்று?
இன்று நிச்சயம் நீ ஒரு ரோஜா,—
ஆனால் முன்பும் நீஒரு ரோஜாதான்.

தமிழாக்கம்: செல்வம்,

இன்று பல எழுத்தாளர்கள் இப்படித்தான் செய்து வருகிறார்கள். இன்று யாரைப்பார்த்து, என்ன பேசுவது என்று திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். நீர் பொந்துக்குள் இருப்பதுபோல் ஒரு மூலையில் இருப்பதனால் லாபமில்லை. இவ்வாறு சொல்கிறவர்கள் ஒன்றிருவர் அல்லர்.

இன்று உண்மையான எழுத்தாளன் எவன் இருக்கிறான்? எவனுடைய எழுத்து உண்மையான ஜீவனும், பாதிப்புச் சக்தியும் பெற்றிருக்கிறது? எந்த ஒரு எழுத்தாளனுடைய எழுத்தாவது சமூகத்தில், நாட்டில், மக்களின் உள்ளத்தில் கிளர்ச்சியை, ஒரு விழிப்பை. ஒரு உத்வேகத்தை எழுப்பியிருக்கிறதா? எழுப்பும் ஆற்றல் பெற்றிருக்கிறதா? இல்லையே! பின் என்ன எழுத்தாளர்கள் இவர்கள்! சொல் வியாபாரிகள் என்றோ, சொல் லடுக்கும் மேஸ்திரிகள் என்றோ சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று ஆத்திரமாக ஒரு நண்பர் குறிப்பிடுகிறார்.

'இருபது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு நான் எழுத்தாளன் ஆனேன். அன்று எனக்கு இருந்த நம்பிக்கையும் தெம்பும் இப்போ செத்துவிட்டது. எழுத்து உலகம் இப்படிப்பட்டது என்று எடுத்துச் சொல்ல அன்று எனக்கு முன்னோடியாக யாரும் இருந்ததில்லை. இருந்து எச்சரித்திருந்தால், நான் எழுத்துத் துறையை எட்டிப் பார்த்திருக்கவே மாட்டேன்' என்று உருக்கமாகச் சொன்னார் ஒரு நண்பர்.

இந்த விதமான எண்ணங்கள் என் காதுகளில் வந்து தாக்குவதால். நான் என்னையும் எழுத்து உலகத்தையும் பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறேன்.

எழுத்தினால் தான் நான் வாழ்க்கை நடத்துகிறேன் என்று சொல்லமுடியாது. எழுத்து எனக்குச் சோறுபோடவில்லை எனது குறைந்த பட்சத் தேவைகளுக்குப் போதுமான பணம்கூட எழுத்து மூலம் எனக்குக் கிடைப்பது இல்லை.

எழுத்துக்காகத் தான் நான் வாழ்கிறேன் என்றும் சொல்லமுடியாது. எழுத்து வளம்பெறுவதற்கு எனது உழைப்பு அவசியம் தேவை என்கிற நிலை எதுவும் இல்லை. எழுத்து வளமும் சிறப்பும் உயர்வும் பெறும்படியாக, ஒரு டால்ஸ்டாய் அல்லது டாஸ்டாவ்ஸ்கி போல, நான் பிரமாதமான சாதனை எதையும் செய்து விடவில்லை.

எழுத்தும் மொழியும் வளமும் உயர்வும் அடையும்படியான சாதனைகளை என்னால் செய்ய முடியுமா, முடியாதா என்பது இங்கு ஆராயப்பட வேண்டிய பிரச்னை அல்ல. இதுவரை நான் செய்து முடிக்கவில்லை என்பது தான் உண்மை

மகத்தான சாதனை எதையும் செய்யாமலே இருபத்தாறு வருஷங்களை ஓட்டி அடைந்திருப்பது போல, இனியும் நான் காலத்தைக் கரியாக்கி விடுவதும் இயல்பாகலாம். அல்லது, எனது எண்ணங்கள், ஏக்கங்கள், ஆசைகள், கனவுகளில் ஏதோ சில சதவிகிதத்தைச் செய்து முடிப்பதற்காவது வாய்ப்புகள் கிட்டினும் கிட்டலாம்.

ஆமாம். நான் எழுத்தாளன் ஆகி இருபத்தாறு வருஷங்கள் முடிந்துவிட்டன.

எழுத்து என் பிழைப்பு அல்ல. படிப்பு எனது பொழுதுபோக்கு இல்லை.

எழுதுவதும் படிப்பதும் தான் என் வாழ்க்கை

இறைவன் புகழைப் பேசாத நாளும், அவன் கீர்த்தியைப் பாடாத நாளும் 'பிறவா நாளே' என்று கருதி வாழ்ந்த சில பக்தர்களைப் போல, நானும் எதையேனும் படிக்காத நாளும் ஏதாவது எழுதாத நாளும் 'பிறவா நாளே' என்ற எண்ணம் வளர்ப்பவன். எழுத்தே என் தெய்வம். படிப்பே என் வழிபாடு.

ஆகவே, நான் எழுத்தையும் எழுத்தாளர்களையும் பற்றி சிந்தித்து அலசி முடிவுகட்ட வேண்டியது அவசியமாகிறது, இனி வரவிருக்கிற எனது சிந்தனைகளுக்கு இது ஒரு முன்னுரை. அவ்வளவு தான் !

பாரதி வாக்கு

'ஒரு தேசத்து ஜனங்கள் மெய்யான உற்சாகமும் வீரத்தன்மையும் புகழும் கொண்டிருக்கும் போது அங்கே பெரிய கலை எழுச்சி ஏற்படுகிறது. அழிவுக் காலங்களிலேயும் தாழ்ச்சிக் காலங்களிலேயும் இடையிடையே தமிழ்நிலையை சபிக்கும் பொருட்டு மகான்கள் தோன்றுவார்களே அல்லாமல் கலையின் வளர்ச்சி ஏற்படமாட்டாது.

2

'கூடியவரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

3

'காலஞ்சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க்கதை எழுதுவதில் உண்மையான திறமையைக் காட்டியிருக்கிறார்- அவருக்குத் தகுந்த சம்மானம் இல்லை. ஆதலால் அவர் அந்தத்திறமையை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டு போக இடமில்லாமல் ஆரம்பத்திலேயே கைவிட்டு இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப்போய்விட்டார்'.

இலக்கிய கூட்டங்கள்

சென்ற இரண்டு மாதகாலத்தில் எழுத்து, எழுத்தாளர் சம்பந்தப்பட்ட மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. முதலாவது சென்ற நவம்பர் மூன்றும் வாரத்தில் மைசூரில் மைசூர் சர்வகலாசாலை ஆதரவில் ஐந்து நாட்கள் இங்கிலீஷில் நடைபெற்ற நாவல் பற்றிய கருத்தரங்கம்: மொத்தம் 21 கட்டுரைகள் படிக்கப்பட்டு ஒவ்வொன்றும் விவாதிக்கப்பட்டன. இந்திய நாவலாசிரியர்களிடம் மேல் நாட்டு செல்வாக்கு, மேல்நாட்டு மதிப்புகளால் பாதிப்பு, இந்திய பெண் எழுத்தாளர்கள், இந்திய நாவல்களில் மேற்கு—கிழக்கு பிரச்னைகள், நாவல் மொழி பெயர்ப்பு போன்ற விஷயங்கள் ஆராயப்பட்டன. இவைகளைவிட குறிப்பிடத்தக்க அம்சம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, இங்கிலீஷ் ஆகிய ஆறுமொழிகளிலிருந்து ஒவ்வொன்றிலும் சிறந்ததாக கருதப்படும் நாவலை நுட்பமாக ஆராய்ந்து விமர்சிக்கும் கட்டுரைகள் படிக்கப்பட்டதுதான், 'பொய்த்தேவு' (க.நா.சு.—தமிழ்) சிவரகுமிகிலேடி (புச்சுபாபு—தெலுங்கு) கிராமாயண (ராவ்பகதூர்—கன்னடம்) உம்மாச்சு (உருபு—மலையாளம்) தியாகபத்ர (ஜைனேந்திர குமார்—ஹிந்தி, காந்தபுரா (ராஜராவ்—இங்கிலீஷ்) ஆகிய நாவல்கள் அவை. இந்த செமினர் பற்றி இன்னொன்றும் குறிப்பிடத்தக்கது. எழுத்தாளர்களும் பேராசிரியர்களும் கலந்துகொண்டார்கள். கே. எஸ். கரந்த், புச்சிபாபு, அய்யப்ப பணிக்கர், க. நா. சுப்ரமண்யம், எம். கோவிந்தன், பத்மராஜு, பிரபாகர் மாச்வே, ராஜாராவ், ஆர். கே. நாராயணன் ஆகிய எழுத்தாளர்களும் ராஜீவி தாரா நாத், பி. ராமமூர்த்தி, எச். எச். அன்னைய கவுடா, குர்தகோடி, எம். தாரிணையா, சி. டி. நரசிம்மையா ஆகிய பேராசிரியர்களும் விமர்சகர்களும் தரமான இலக்கிய கருத்துப் பரிமாறுதல் செய்துகொண்டது கருத்தரங்கத்தின் தரத்தை ரொம்பவும் உயர்த்தியது. எழுத்தாளர்களையும் பேராசிரிய விமர்சகர்களையும் சேர்த்துவைத்து இந்த கருத்தரங்கத்தை நடத்தியவர் மைசூர் சர்வகலாசாலை இங்கிலீஷ் பிரிவு தலைமைப் பேராசிரியரான சி. டி. நரசிம்மையா. இந்தியாவிலேயே அவர்தான் இதை முதல் முதல் செய்திருப்பவர் என்று நான் நினைக்கிறேன். இந்த முன்-மாதிரி நம் மொழியிலும், பல்கலைக் கழக வட்டாரத்தில் நடக்கக்கூடிய நாளை எதிர்பார்க்கலாமா?

நமது தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாடும் டிசம்பர் வாரத்தில் நடந்தது. வழக்கம்போல, ஒரு செயல்முறை. எழுத்தாளர் மகாநாட்டிலே ஒரு குறிப்பிடத்தக்க இலக்கியப் பேச்சைக்கூட கேட்க முடியவில்லை. 'தேசப் பாதுகாப்பில் எழுத்தாளன் பங்கு' என்ற கருத்தரங்கம்கூட எழுத்தாளன் பார்வையாக இல்லாமல் அரசியல் வாதி பார்வையாகத்தான் இருந்தது. எழுத்தாளர் சங்கம் கொஞ்சம் தன் இந்த தடம்தேய்ந்த ஒரே சுவட்டில் போவதை சுண்டிப் பிடித்து இழுத்து, இலக்கியம் சம்பந்தமான ஒரு நிகழ்ச்சி நிரலை இனியாவது கண்டுபிடித்தால் மொழிக்கும் இலக்கியத்துக்கும் லாபமாக, பயனுள்ளதாக இருக்குமே.

மூன்றாவதாக சென்ற மாதக் கடைசியில் கேரளத்தில் உத்யோக மண்டல் என்ற இடத்தில் ஒரு வாரம் நடைபெற்ற ஐந்தாவது அகில இந்திய எழுத்தாளர் மகாநாடு. வெகு சிறப்பாக நடந்தது மகாநாடு நல்ல உபசரிப்பு, வசதி. மகாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் எம். கே. கே. நாயர், பொதுச் செயலாளர் சி. எஸ். ஸ்ரீகண்ட நாயர் இருவருக்கும் இந்த பெருமை சேரும் நாடெங்கிலும் இருந்துவந்த 250 எழுத்தாளர்களுக்கு கேரள தர்சனம். கேரள கலைகளையும் பார்த்து அனுபவித்தார்கள். இன்பமான நாட்களை தந்த நிர்வாகிகள் பாராட்டுக்குரியவர்கள்.

இதுக்கு முன் எழுத்தாளர்கள் மட்டும் கலந்துகொண்ட மகாநாடுகள், இதில் கலைஞர்களும் பங்கு கொண்டார்கள். இலக்கியத்துக்கும் மற்ற கலைத் துறைகளுக்கும் உள்ள உறவினால் இந்த ஏற்பாடு வரவேற்கத் தக்கதும் பலனுள்ளதும் ஆகும். நாற்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தற்கால [redacted] இலக்கியம் சம்பந்தமாக மட்டும் முப்பத்தி மூன்று கட்டுரைகள், இலக்கியத்துக்கும் சங்கீதம், ஓவியம், நாடகம், சினிமா இவைகளுக்கும் உள்ள உறவு பற்றிய கட்டுரைகள், இந்திய கலாசார மரபு-நவீன பாதிப்பு பற்றிய கட்டுரைகள் படித்து விவாதிக்கப்பட்டன. இலக்கியம் பற்றிய கருத்தரங்கு, கவிதை, கட்டுக்கதை, நாடகம், விமர்சனம் ஆகிய நான்கு பிரிவுகளாக பிரிந்து தனித்தனியாக நடந்தது. நான்கு பிரிவுகளிலும் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களுக்கு ஒன்றிலே மட்டும் கலந்து கொள்ள முடிந்தது. இந்த ஏற்பாடு சரியில்லை. வரும் மகாநாடுகளில் நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

கருத்தரங்க விவாதங்கள் ரொம்ப சிறப்பாக இருந்ததாக சொல்லமுடியாது. பரவாயில்லை என்றுதான் சொல்லலாம். இந்த மகாநாடு முதன்மையாக சாதிக்கிற காரியம் நம் நாட்டு பல மொழி எழுத்தாளர்களும் பழகிக்கொள்ள வாய்ப்பு அளிப்பதுதான். இது தொடர்ந்து இன்னும் முறையாக நடந்தால் ரொம்ப திருப்தியாக இருக்கும். என் மட்டுக்கு படைப்பாளிகள், விமர்சகர்கள் விமர்சன பத்திரிகாசிரியர்களை சந்திக்க கிடைத்தது எனக்கு லாபம்.

தமிழ் இலக்கியம் சம்பந்தமாக நானும் க. நா. சுப்ரமண்யமும், டி. கே. துரைஸ்வாமியும் அவர்கள் கேட்டு கட்டுரைகள் எழுதி இருந்தோம். அவைகளை படித்த நம் மொழி சகோதரப் பிரதிநிதிகள் சிலர் அங்கேயே தங்கள் கண்டனத்தை தெரிவித்துக்கொண்டது மட்டும் இல்லாமல், சென்னையில் தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டத்திலும் கடுமையாகத் தாக்கி உணர்ச்சி வசப்பட்டு பேசினார்கள். எங்கள் கட்டுரைகளை தமிழ் வாசகர்களுக்கு முதலில் தெரியப்படுத்த உத்தேசம். அடுத்த ஏட்டில் 'எழுத்து'வில் வெளிவரும். அதன் பிறகு அவைகளைப்பற்றி நாம் விவாதிக்கலாம்.

சி. சு. செ.

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1.	சொர்க்கத்தில் சம்பாஷணை	வ. ரா.	ரூ. 3-00
2.	வசந்த காலம் (கட்டுரைகள்)	,,	ரூ. 3-00
3.	பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ. 4-00
4.	வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ. 2-00
5.	அகல்யை (ஓரங்க நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ. 4-00
6.	ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ. 4-00
7.	சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ. 3-00
8.	சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ. 4-00
9.	மணல் வீடு ,,	,,	ரூ. 4-00
10.	கோடை வயல் (கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ. 1-25
11.	கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ. 2-50

விவரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :—

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

எழுத்து

புது சந்தா விகிதம்

ஜனவரி 1966 முதல்

ஆண்டுச் சந்தா	ரூ. 6-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 15-00
வெளி நாடுகளுக்கு	ரூ. 8-00
மூன்று ஆண்டுகள்	ரூ. 20-00
தனிப்பிரதி	50 பைசா

பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

எழுத்து
19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

EZHUTTHU

Tamil literary monthly

ADVERTISEMENT TARIFF

INSIDE PAGE

Full Page	15 × 20 cms	Rs. 80-00
Half ,,	15 × 10 / 7½ × 20 ,,	Rs. 40-00
Quarter ,,	7½ × 10 / 15 × 5 ,,	Rs. 20-00
Back cover		Rs. 100-00
Inside covers		Rs. 90-00

Concession for Contract Page

EZHUTTHU
19-A, Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5